# மலரும் திராவிடம்



மதுரை மன்னன்

முதற் பதிப்பு 1–6–'54

விலை ரூ. 1-4-0

புத்தக விற்பனை உரிமை:

**மின்மினி பதிப்பகம்**

தெற்கு ஆவணி வீதி,

மதுரை.

சகல உரிமையும் பதிப்பகத்தாருக்கே.

ரவீந்திரா பிரிண்டர்ஸ், மேலக்கோபுரத் தெரு, மதுரை.

நெஞ்சுக்கு நீதிகண்டு

சங்கத்தமிழுக்கு தங்கத்தமிழில் உரைதந்த

தமிழினத்தலைவர் கலைஞர் அமைத்திட்ட

'அண்ணா அறிவாலய' நூலகத்திற்கு

இரணியல் ரவி, B. Sc., B. L., காணிக்கை.

நூலின் பெயர்:

ஆசிரியர் பெயர்:

ஆசிரியரின் நூல்களில் சில:
உங்கள் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| இன்பத்திராவிடம் | 1 | ரூபாய் |
| திராவிடம் பிரிந்தால் | 1 | ,, |
| மந்திரி மகள் | 8 | அணு |
| அண்ணுவின் புரட்சி | 8 | ,, |
| போர்க்களத்தில்— கருணாநிதி | 8 | ,, |
| அழியட்டும் திராவிடம் | 8 | ,, |
| கட்டுங்கள் மூட்டையை | 8 | ,, |
| குற்றவாளிக் கூண்டில் ஆச்சாரியார் | 4 | ,, |
| பெரியாரும் சினிமாவும் | 4 | ,, |
| யார் இந்த ம.பொ.சி. | 4 | ,, |

இவை அனைத்தும்
எங்களிடமும் கிடைக்கும்.

உருவாகிறது!
விருதை. ந. இராமசாமி
எழுதிய
# இலட்சியப் பாதையிலே தி.மு.க.
மூவர்ண வார்னீஷ் முகப்பு
விலை ரூ. 1-0-0.

# மலரும் திராவிடம்

* மதுரை மன்னன்

## ஜவஹர்லால் ஆட்சியில் !

சிறிய குடிசைக் கைத்தொழில்களில் ஈடுபடும் வியாபாரிகளுக்கும், மாணவர்களுக்கும் கடன் உதவி அளிப்பதற்காக எட்டு ராஜ்யங்களுக்கு மத்திய அரசாங்கம் கடன் உதவி அளித்திருக்கிறது. அதில் ராஜஸ்தான், டில்லி, போபால் ராஜ்யங்களுக்கு தலா இரண்டு லட்சம் ரூபாயும், கூர்ஜரம், மத்திய பாரத் ராஜ்யங்களுக்கு தலா ஐம்பதினாயிரம் ரூபாயும், ஆந்திரா உட்பட்ட சென்னை ராஜ்யத்துக்கு ஐயாயிரம் ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது!

சென்னைக்கு அடுத்திருக்கும் ஆவடியில் இருந்த ராணுவ தளம் வடக்கே எடுத்துச்செல்லப்பட்டது!

ஆயிரத்துத் தொளாயிரத்தி ஐம்பத்திரண்டிலே கல்லூரிகளில் அனுமதிக்கப்படும் மாணவத் தோழர்களில், பிராமணர் 89 பேர், பிராமணரல்லாத இந்துக்கள் 134 பேர், முஸ்லீம்கள் 11 பேர், கிறிஸ்தவர்கள் 31 பேர், ஷெட்யூல்ட் வகுப்பினர் 51 பேர், பிற்பட்ட வகுப்பினர் 80 பேர் என்றிருந்த கணக்கு, ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்திரண்டு, ஐம்பத்து மூன்றிலே பிராமணர் 160 பேர், பிராமணரல்லாத இந்துக்கள் 53 பேர்,

முஸ்லீம்கள் 7 பேர். கிறிஸ்தவர்கள் 25 பேர், ஷெட்யூல்ட் வகுப்பினர் 33 பேர். பிற்பட்ட வகுப்பினர் 100 பேர் என்று மாறியிருக்கிறது. ஜவஹர்லாலின் பிரதிநிதி காந்தியாரின் சம்பந்தியாருடைய சென்னை மாநில ஆட்சியில்!

'டெல்லி சர்க்காரால் கர்நாடகம் அலட்சியப் படுத்தப் படுகிறது. கர்நாடக ராஜ்யத்தை நிறுவத் தவறினதின் மூலம் கன்னடர்களுக்கு டெல்லி சர்க்கார் பெரும் தீங்கிழைத்து விட்டிருக்கிறது என்றும், ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் கர்நாடகம் வேதனைதரும் முறையில் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்றும், இந்தியத் துணைக் கண்ட பாராளுமன்ற உறுப்பினரான ஐதராபாத் தோழர் வி. எஸ். படீல் எம். எல். ஏ. யின் தலைமையில் பெல்காம் நகரில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் குமுறியெழுந்தனர்' என்ற செய்தி!

'நகைகளை விற்குவது அரசாங்கத்துக்கு வரிப்பணத்தைக் கட்டவேண்டும். என்று அணங்குகளுடன் வம்புச் சண்டைக்குச் செல்லும் வன்னெஞ்சங்களைப் பதவியிலே நீடிக்கச் செய்தது மேலிடத்தின் சுமுகமான சூழ்ச்சிதான், என்ற துயர கீதம்!

ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தாறு மார்ச் திங்கள் வரை சென்னை மாநிலத்தில் ஆங்கிலேயர் ஆட்சியில் அரசாங்கப் பொக்கிஷத்தில், சேமிப்புத் தொகையாக (ரிசர்வ் பண்ட்) சேர்த்து வைக்கப்பட்டிருந்த தொகை ரூபாய் முப்பத்தோரு கோடியே இருபத்தோரு லட்சம். அத்தொகையில் இப்போது எதுவும் இல்லை. எல்லாம் செலவழிக்கப்பட்டு விட்டது. காங்கிரஸ் சர்க்கார் ஏற்பட்ட பின்னரே மேற்படி தொகையை எடுத்துச் செலவழித்திருக்கிறோம் என்று நிதி இலாகா அமைச்சர்

திரு. சி. சுப்ரமண்யனூர் கூறிக்கொண்டிருக்கும் நேரத்தில் தான் நாட்டிலே கோரச் சாவுகள் பல நிகழ்ந்திருக்கின்றன!

காமன் வெல்த் நாடுகளிடையே கைகுலுக்கி, கன்னங்குழைய கனிவாய்ச் சிரிப்புடன் கற்கண்டு மொழிகள் உதிர்த்துக்கொண்டிருந்த நேரத்திலே, மலாயாவிலே தமிழ் நாட்டான்—வாழ வழியின்றி வயிற்றை நிரப்புவதற்காக பிழைப்பு தேடி மலாயா சென்றிருந்த தமிழன் சி. ஆ. கணபதியை மரண தண்டனையிலிருந்து காப்பாற்ற முடியவில்லை!

ஏதாவது ஒரு மாகாணத்தின் அரசாங்கமானது இந்திய அரசியல் திட்டத்தில் தீட்டப்பட்டுள்ள விதிகளின்படி நடத்தப்படமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது என்று தலைவர் கருதுவாராஞல், உடனே அவர் அந்த மாகாண அரசாங்கத்தின் எல்லா அதிகாரங்களையுமோ அல்லது தேவையான அதிகாரங்களை மட்டுமோ, தன் கைக்கு மாற்றிக்கொண்டு, அவற்றைத் தானே அமுல் நடத்தலாம்.

அதுபோலவே, அவர் அந்த மாகாண கவர்னரின் எல்லா அதிகாரங்களையும் அல்லது தேவையான அதிகாரங்களை மட்டும், தானே எடுத்துக்கொள்ளலாம்.

அதுமட்டுமில்லாமல், மாகாண சட்டசபைகளின் அதிகாரங்கள் அனைத்தையும் டில்லி பாராளுமன்றத்திற்கு எடுத்துக் கொடுத்துவிட்டேன் என்று அவர் அறிவித்துவிடலாம்.

அப்படி அவர் அறிவித்ததன் மூலம் தனக்குக்கிடைத்துள்ள மாகாண சட்ட சபைகளின் அதிகாரங்களை, அமுல்

நடத்தும் உரிமையை பாராளுமன்றம், தலைவரிடமே ஒப்படைத்து, அவரே அந்த அதிகாரங்களைச் செலுத்திவரட்டும் என்று தீர்மானித்து விடலாம்.

இவ்வாறாகத் தனக்குக் கிடைத்த மாகாண சட்ட சபைகளின் அதிகாரங்களை அமுல் நடத்தும் உரிமையினை, தலைவர், தனக்குக் கீழ்ப்பட்ட எந்த அதிகாரிக்கும் மாற்றிக் கொடுக்கலாம்.

மாகாண சட்ட சபைகளின் அதிகாரங்களை இப்படியெல்லாம் தனக்குக் கீழ்ப்பட்ட அதிகாரிகளின் கைகளில் ஒப்படைக்கும்போது, அப்படிச் செய்வதற்குத் தேவையான எல்லா விதப் புதிய சட்டங்களையும், விதிகளையும், நடைமுறைகளையும், தலைவர், தானே பிறப்பித்துக் கொள்ளலாம், அல்லது டில்லி பாராளுமன்றமும் பிறப்பிக்கலாம்.

இவ்வளவுமின்றி, மாகாண அரசாங்கத்தின் எந்த உறுப்பினர் அல்லது எந்த அதிகாரியின் எந்த உரிமைகளையும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கிறேன் என்று கட்டளை பிறப்பிக்கும் அதிகாரமும் தலைவருக்கு உண்டு.

இவ்வாறு அரசியல் அமைப்பு நெருக்கடியைப்பற்றி இந்தியத் துணைக் கண்டத்தி அரசியல் திட்டத்தில் விதிகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பது!

இன்னும் எந்தெந்த முறையில் ஜவஹர்லால் ஆட்சியில் கொடுமைப்பிணி புகுந்துள்ளது? வதைக்கும் வாய்ப்பு வாய் திறந்துள்ளது? சிதைக்கும் சிந்தை சிரித்துக் கொண்டிருக்கிறது என்பதை அவர்களது இன்னொரு திட்டத்தின் மூலம் காணலாம், விரிவாக!

இந்தியத் துணைக் கண்டத்து அரசியல் திட்டப்படி, ஆட்சி பீடத்தவரின் அதிகாரங்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்படுகின்றன.

1. மத்திய ஆட்சிக்குரிய அதிகாரங்கள்.
2. மாகாண ஆட்சிக்குரிய அதிகாரங்கள்.
3. இருபாலருக்கும் பொதுவாக உள்ள அதிகாரங்கள்.

இந்த மூன்று வகையான பிரிவிலே, மத்திய ஆட்சிக்குரிய அதிகாரங்களை வரையறுத்துக் காட்டும் கால அட்டவணையை, திரும்பிப்பார்க்க வேண்டும் என்ற காரணத்துக்காகவே, கால அட்டவணையை இங்கு காணிக்கை யாக்குகிறோம்.

தெளிவில்லாத நெஞ்சங்கள், சிந்தையில்லாத சின்னதுகள், அரசியல் என்றால் என்ன என்றே அறியா அஞ்ஞானங்கள், அலசிப்பார்க்கட்டும்.

1. இந்தியத் துணைக்கண்டத்தின் பாதுகாப்புக்கான எல்லா அதிகாரங்கள்.

2. கடற் படை, தரைப் படை, விமானப் படை மற்ற படைகள் பற்றிய அதிகாரங்கள்.

3. பாசறை அமைப்பது; பாசறை அமைந்துள்ள அமைக்கப்பட்டுள்ள வட்டாரத்தின் ஆட்சியை நடத்தல்.

4. கடல், தரை, விமானப் படைகள் பற்றிய தொழிற்சாலைகள் நடத்தல்.

5. போர்த் தளவாடங்கள், கருவிகள், மருந்துக்கள் தயாரித்தல்.

6. அணு சக்தித் தயாரிப்பு, அதற்குத் தேவையான சுரங்கப் பொருள்கள் பற்றிய அதிகாரங்கள்.

7. போர் ஏற்பட்டால், போர் நடத்துதற்குத் தேவையானவை என்று பாராளு மன்றத்தினரால் தீர்மானிக்கப்படுகின்ற எல்லாத் தொழிற்சாலைகளின் அதிகாரங்கள்.

8. உள் நாட்டுப் பாதுகாப்பு, வெளிநாட்டு உறவு, இவற்றின் தொடர்பான காரணங்களுக்காக விசாரணையின்றிக் காவலில் வைக்கும் உரிமை.

9. போர், அமைதி, வெளிநாட்டு உறவு பற்றிய எல்லா அதிகாரங்கள்.

10. பிரஜா உரிமை.

11. ரயில்வேக்கள்.

12. தேசிய சாலைகள் என்று பாராளு மன்றத்தினரால் குறிப்பிடப்படும் நெடுஞ்சாலைகள்.

13. உள் நாட்டில் நீர் வழிப் போக்குவரத்து.

14. கடற் படைக் கல்வி புகட்டுவது; அப்படிப்பட்ட படைக் கல்வியை மாகாண ஆட்சியாளர்கள் புகட்டுவாராயின் அதனைக் கட்டுப்படுத்துவது.

15. கலங்கரை விளக்குகள்.

16. முக்கிய துறைமுகங்கள்—அவற்றின் அதிகாரிகள் அவற்றின் ஆட்சிமுறையை வகிக்கும் உரிமை.

17. விமானப் போக்குவரத்துப் பாதைகள்—விமான நிலையங்கள்—விமானக் கல்வி புகட்டுதல்—விமானக் கல்வியை மாகாண ஆட்சிகள் புகட்டுமாயின் அதனைக்கட்டுப் படுத்தும் அதிகாரம்.

18. தபால், தந்தி இன்ன பிற இலாகாக்கள்.

19. நாணயங்கள் தயாரிப்பது, வெளியிடுவது முதலியன.

20. இந்தியத் துணைக் கண்டத்தின் ரிசர்வ் பாங்க்.

21. தபால் நிலைய சேவிங்ஸ் பேங்க்.

22. வெளி நாடுகளுடன் வாணிபம், ஏற்றுமதி, இறக்குமதி முதலிய அதிகாரங்கள்.

23. மாகாணத்திற்கு மாகாணம் நடைபெறும் வாணிபம் பற்றிய அதிகாரங்கள்.

24. பாங்க், இன்ஸ்யூரன்ஸ் முதலிய ஜாயின்ட் ஸ்டாக் (லிமிடெட்) கம்பெனிகள் பற்றிய அதிகாரங்கள்.

25. பாங்குகள் பற்றிய அதிகாரங்கள்.

26. செக்குகள், பிராமிசரி நோட்டுகள் முதலியன பற்றிய அதிகாரங்கள்.

27. இன்ஸ்யூரன்ஸ்.

28. பங்கு மார்க்கெட்.

29. டிரேட் மார்க், காபிரைட், பேடன்ட் உரிமைகள்.

30. சரியான எடைக் கற்கள், அளவைகள் முதலியவற்றை ஏற்படுத்தும் அதிகாரங்கள்.

31. வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்கள்—மாகாணத்துக்கு மாகாணம் விற்பனையாகும் பொருள்கள்—இவற்றின் தரத்தை நிர்ணயிப்பது.

32. பொது நன்மையை முன்னிட்டு மத்திய ஆட்சியிடமே இருந்தாக வேண்டும் என்று பாராளு மன்றத்தால் குறிப்பிடப்படும் தொழில்கள் பற்றிய அதிகாரங்கள்.

33. எண்ணெய்க் கிணறுகள்—சுரங்கங்கள்.

34. அவற்றில் வேலை செய்பவர்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரங்கள்.

35. பல மாகாணங்களிற் பாயும் ஆறுகள் பற்றிய அதிகாரங்கள்.

36. கடலில் மீன் பிடித்தல்.

37. உப்பு உற்பத்தி—விநியோகம்—அவை பற்றிய கட்டுப்பாடுகள்.

38. அபின் உற்பத்தி—ஏற்றுமதி.

39. பொது மக்களிடம் காட்ட சினிமாப் படங்களை அனுமதிக்கும் அதிகாரம்.

40. விஞ்ஞானம், ஆராய்ச்சி, தொழில் நுணுக்கம் தொடர்பான உயர்தர நிலையங்களின் தரத்தை நிர்ணயிக்கும் அதிகாரம்.

41. ஸென்ஸஸ் (குடி மதிப்பு)

42. மாகாண சட்ட சபைகள், மத்திய சட்ட சபைகள் இவற்றின் தேர்தல் பற்றிய அதிகாரங்கள்.

43. உயர் நீதி மன்றங்களை உருவாக்குதல் முதலிய அதிகாரங்கள்.

44. விவசாய வருமானம் தவிர்த்த ஏனைய வருமானங்கள் மீது வருமான வரி விதிக்கும் அதிகாரம்,

45. ஏற்றுமதி இறக்குமதி வரிகள் விதிப்பது.

46. புகையிலை வரி விதிப்பது.

47. கார்ப்பரேஷன் வரி விதிப்பது.

48. விவசாயம் தவிர்த்த ஏனைய முதல் (Capital) மீது வரி விதிப்பது.

49. விவசாயம் தவிர்த்த ஏனைய சொத்துக்கள் மீது மரணவரி, வார்சு வரி விதிப்பது.

50. ஸ்டாம்ப் வரி, பத்திரிகைகள் மீதும், அவற்றில் வெளியாகும் விளம்பரங்கள் மீதும் விற்பனை வரி விதிப்பது.

இவை போன்ற இன்னும் பல்வேறு துறைகளில் பல்வேறு அதிகாரங்களும் மத்திய ஆட்சிக்கு உரியவை என்று இந்தியத் துணைக்கண்ட அரசியல் திட்டம் என்ற பட்டியலில் பொறுக்கப்பட்டுள்ளன!

கல்வி, சுகாதாரம், போலீஸ், சிறைச்சாலை, நீதி மன்றம் முதலிய செலவினங்கள் உள்ள இலாகாக்களை மத்திய சர்க்கார் வெறுத்து, மாகாண சர்க்கார் வசம் ஒப்படைத்திருக்கிறது.

அதிகாரப் பொறுப்பெல்லாம், டில்லி அரசாங்கத்தைச் சேர்ந்தது எதிர்பார்த்து ஏங்கிக்கிடக்கும் பொறுப்பெல்லாம் மாகாண அரசாங்கத்தைச் சேர்ந்தது. நாட்டின் வாட்டத்தை ஓட்டி—வாழ்வை மீட்டி - இன்பத்தை நிலை நாட்டி - பரந்த நோக்கத்திலே விரிந்த மனப்பான்மையைச் சிறந்த முறையில் காட்டுவார்கள் சுதந்திரம் கிடைத்த

பிறகு என்றுதான் மக்கள் கருதி மகிழ்ச்சிப்பால் மாந்தி, மடை திறந்த வெள்ளம் போல ஓடினர்—ஆடினர்—பாடினர்!

ஆனல், இந்தியத் துணைக் கண்டத்துக்கு, சுதந்திரம் என்ற பெயரால் வெள்ளையர் அளித்த விருதுப் பொம்மை, தென்னாட்டுக்குத் தீராத தொல்லையாக—சுருக்குக் கயிறாக மாறிவிட்டது!

மாறிவிட்டது என்றுகூட, கூறமுடியாத அளவுக்கு மாற்றப்பட்டுவிட்டது.

வடக்கு வசதியாக வாழவும், தெற்கு துயராகத் தேயவும் காரணமாகிவிட்டனர் வடக்கே வாழும் பெரிய மனிதர்கள். தெற்கே வாழும் -தேயும் மக்கள் குழு, வாழ்வை உடைமையை—உறுதியை — வளத்தை — மரியாதையை மானத்தை அடகு வைத்து மாற்றான் முன் மண்டியிட்டு, வயிறு நிரப்பும் இழி நிலைக்கும் வந்துவிட்டனர்—வலுக்கட்டாயமாக வாழும் உரிமையைப் பறிக்கப்பட்டவர்களாயினர் வளமாக வாழ்ந்துவந்த தமிழர்கள்!

உரிமையிழந்த தமிழர் ஒதுக்கப்பட்ட நிலையில் -ஒடுக்கப்பட்ட நிலையில் ஓடித் தேய்ந்த கிராமபோன் ரிகார்டாக தேய்ந்த இயந்திரமாக மாற்றப்பட்டனர், வடவரால்!

'பசி' என்றால், 'பஜகோவிந்தம் பாடு" என்ற பதில் கொடுக்கப்பட்டது ஆட்சியாளரால்!

"வேலையில்லை, வேலை கொடுங்கள். கூலி கொடுங்கள்" என்றால், முதல் நம்பர் எதிரிகள் என்ற பட்டம் பதிலாகக் கொடுக்கப்பட்டது ஆட்சியாளரால்!

"சர்வாதிகாரத்தை ஒழித்து ஜனநாயக முறைப்படி எங்களுக்கு நல் வாழ்வு தாருங்கள்" என்றால், எல்லாம் 'ஆண்டவன் செயல்' என்ற இருமாப்பு, பதில் உருவிலே பகரப்பட்டது ஆட்சியாளரால்!

நடக்கவும் சக்தியின்றி கிணற்றிலே விழுந்து பிண மான நல்ல தங்கைகள் கதை நாட்டு நிகழ்ச்சிகளாகிவிட் டன!

பசி பொறுக்காமல், பாதையிலே, பதை பதைத்து உடல் விறைத்து உயிர் மறைத்துக் கிடக்கும் பாட்டாளி மக்கள் தொகை பகிரங்க வரலாறுகளாகிவிட்டன!

துள்ளித் திரிகின்ற பிள்ளைக் கனியமுதுக்கு ஒரு வாய்ச்சோறு கொடுக்க வசதி வாய்ப்பின்றி, தங்களைத் தாங்களே மரத்தின் கிளைகளோடு கிளையாகத் தொங்க விட்டுக் கொண்ட தந்தைமார்களின் எண்ணிக்கை வளர் பிறை போல வளர ஆரம்பித்தது!

"ஓடும் ரயிலுக்கு முன் உயிரைப் பணயம் வைத் தான். ஒரே கயிற்றில், ஒரு குடும்பமே தற்கொலை செய்து கொண்டது. விஷந்தின்று தாயும் மகனும் மாண்டனர்.'

"தாய்ப் பால் வற்றியதால், குழந்தைகள் மாண்ட துக்கச் செய்தி செவியைத் துளைக்க, அது கண்டு சகிக்கா மல்—பொறுக்காமல் தானும் தண்ணீரில் விழுந்து, மிதந்து இந்தத் தரணியிலிருந்தே தன்னை விடுவித்துக் கொண் டாள்!"

"கடிதமொன்று தீட்டி வைத்துவிட்டு, கோரக் கொலை செய்து கொண்டாள்!"

"சோற்றுக்குப் பதிலாக, சோளத்தைச் சாப்பிட்டதால், சோர்ந்து - சிதைந்து ஜீவனையும் இழந்து - அணு அணுவாகச் செத்தனர் பலர்!"

கூந்தலை விற்றுக் குழந்தைக்குப் பாலமுதம்தர முயன்ற தாய் — கந்தல் புடவைக்குத் தன் கண்மணிக் குழந்தைகளை ஏலம் கூறிய பெண்கள் விற்பனையாகாத குழந்தைகளை விசாரம் விரிவடையக்கூடாதே என்ற விபரீத பயம் மேலிட்டு வீதியிலே விட்டுச் சென்ற கோதைகள் — அரை வயிற்றுக் கஞ்சிக்காக நாட்டின் பண்பை — நாரிமணிகளின் கற்பை ஆடவர் சந்தையிலே விலைகூற வேண்டிய நிர்பந்தம் நேரிட்ட நெஞ்சு பொறுக்கா வேதனை நிகழ்ச்சிகள் — குடும்பம் குடும்பமாக பஞ்சைகளாய் வெளியேறி நாடோடிகளாய்ச் சுற்றி, பிச்சைக்காரர்களாய் உலவி, எச்சிலைக்கும் வழியின்றி ஏமாந்து நிற்கும் ஏற்றங்கொண்டு வாழ்ந்திருந்தவர்களின் இழிநிலைக் காட்சி— இவையெல்லாம் நாட்டில் நடக்கும் அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டன!

அரசாங்க தூதர்களுக்கென்று இந்தியத் துணைக் கண்டத்து மத்திய அமைச்சரவையிலிருந்து ஏற்படுத்தப்பட்டு, இதற்காகச் செலவிடப்படும் தொகை மட்டும் ஒரு கோடியே ஐம்பத்துமூன்று லட்சத்து எண்பத்தெட்டாயிரம் ரூபாய், மிக மிக அதிகமான அளவுக்குத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது பாதுகாப்பு இலாகா என்ற பெயருள்ள ஒரு இலாகாவுக்கு!

இவையெல்லாம், வெள்ளையன் ஆண்ட காலத்திலே, அவன் பணத்தையெல்லாம் பீரங்கிக்கும் துப்பாக்கிக்குமே செலவிடுகிறான். இரத்த வெறிபிடித்து அலைகிறான் என்று பேசிய எசிய அகிம்ஸா மூர்த்தியின் அடிச்சுவற்றைப்

பின்பற்றி, நடுநிலைமை என்ற போர்வைக்குள் புகுந்து கொண்டு, நாணயமற்ற முறையில், நாடாண்டு கொண்டிருக்கும் ஜவஹர்லால் ஆட்சியினர்.

நடைமுறையில் உள்ள, போலீஸ் சட்டங்கள், அச்சுக் கூட சட்டங்கள், கிரிமினல்-லா-திருத்தச் சட்டங்கள், வங்காள ரெகுலேஷன் சட்டம் 1818, சென்னை ரெகுலேஷன் சட்டம் 1819, பம்பாய் ரெகுலேஷன் சட்டம் 1827 மற்றும் பிரிட்டிஷார், தம்முடைய அடக்குமுறைக் கொடுங்கோல் ஆட்சியை நிலைநாட்டிக் கொள்வதற்காகவும், இந்தியத் துணைக் கண்டத்து மக்களின் உரிமையை ஒடுக்குவதற்காகவும் நிறைவேற்றி வைத்துள்ள எண்ணற்ற சட்டங்கள் ஆகிய இவற்றால் மக்களின் எழுத்துரிமையும் பேச்சுரிமையும் பறிக்கப்பட்டுவிடுகின்றன!

இதில் தோன்றும் வேடிக்கை என்ன வெனில், இச் சட்டங்களை சைத்தான் சட்டங்கள் என்றும், அநீதியின் உருவங்கள் என்றும், அக்ரமத்தின் அவதாரங்கள் என்றும், அப்போது அரசாண்டு வந்த ஆங்கிலேயரை அவதூறாக அர்சித்து வந்த அதே ஆசாமிகளின் ஆட்சியில், அதே சட்டங்கள்.

எந்த ஜவஹர்லாலின் தலைமையில் ஆங்கிலேயர் சட்டங்களுக்குப் பகிஷ்காரமும், சைத்தான் சட்டம் என்ற அடைமொழியும் கொடுக்கப்பட்டதோ, அந்த ஜவஹர்லாலின் ஆட்சியில்தான் அதே அநியாயச் சட்டங்கள் அமுல் நடத்தப்படுகின்றன.

ஐதராபாத் நைஜாமுக்கு மாதம் ஒன்றுக்கு, எட்டு லட்சத்து முப்பத்து மூன்றுயிரத்து மூன்று ரூபாய் சொந்தச் செலவுக்கெனத் தரப்படுகிறது. இது தவிர, அவ

ருக்கு, இருபத்தைந்து லட்ச ரூபாய் பணமுடிப்பும் அளித்திருக்கிறது, ஜவஹர்லாலின் ஆட்சி!

மக்களது வரிப் பணத்தில், குடியரசுத் தலைவருக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் மாதச் சம்பளம் எவ்வளவு தெரியுமா? பத்தாயிரம் ரூபாய். கவர்னர்களுக்கு ஐயாயிரத்து ஐநூறு ரூபாய். இவை தவிர, சில்லறை அலவன்ஸ், இராணுவச் செயலாளர் அலவன்ஸ், விருந்து அலவன்ஸ், மருத்துவ அலவன்ஸ், வீட்டுச்சாமான் அலவன்ஸ், கான்ட்ராக்ட் அலவன்ஸ், பயணச் செலவு அலவன்ஸ் முதலிய பல அலவன்ஸ் தொகைகள் தனியாக ஒதுக்கப்பட்டுள்ளன ஜவஹர்லால் ஆட்சியில்!

| | |
|---|---|
| சென்னை கவர்னருக்கு அலவன்ஸ் ரூபாய் | 4,92,500 |
| பம்பாய் கவர்னருக்கு அலவன்ஸ் ரூபாய் | 3,55 800 |
| மேற்கு வங்காள கவர்னருக்கு அலவன்ஸ் ரூ. | 4,70,500 |
| உத்திரப் பிரதேச கவர்னருக்கு அலவன்ஸ் ரூ. | 2,95,000 |
| கிழக்குப் பஞ்சாப் கவர்னருக்கு அலவன்ஸ் ரூ. | 1,79,900 |
| பீகார் கவர்னருக்கு அலவன்ஸ் ரூபாய் | 1,94,000 |
| மத்திய பிரதேச கவர்னருக்கு அலவன்ஸ் ரூ. | 1,55,500 |
| அசாம் கவர்னருக்கு அலவன்ஸ் ரூபாய் ... | 1,70,000 |
| ஒரிஸா கவர்னருக்கு அலவன்ஸ் ரூபாய் ... | 1,53,400 |

இவை தவிர, குடியிருக்கும் மாளிகைகள் வாடகையின்றி உபயோகித்துக்கொள்ள வசதியளிக்கப்பட்டிருக்கிறது. ஜவஹர்லால் ஆட்சியில்!

ஒரு இந்தியத் துணைக் கண்டத்து பிரஜையின் சராசரி மாத வருமானம் ரூபாய் 4—11—0 என்று கணக்கிடப்பட்டிருக்கும் இந்த நாட்டில் தான், அவர்களின் வரிப் பணம் முன் சொன்னதுபோல பாழாக்கப்படுகிறது ஜவஹர்லால் ஆட்சியில்! கராச்சி காங்கிரஸ் மாநாட்டில்

இந்தியாவில் எவருக்கும் மாதச் சம்பளம் 500 ரூபாய்க்கு மேல் இருக்கக்கூடாது என்று முழக்கமிட்டவர்கள் ஆட்சியில்!

சங்க காலத்தில், இல்லாதிருந்த, ஆரிய ஆதிக்கம், தீண்டாமை, பாராமை, பிறப்பால் உயர்வு தாழ்வு, கர்மாவதி, அடிமை வேலை, உழவையும் தொழிலையும் இழிவுப்படுத்தல், பெண் அடிமை மன்றங்களில் வழக்கறிஞர், பிறமொழி மந்திரம், பிறநாட்டு ஆட்சி முதலியவை இருக்கின்றன ஜவஹர்லால் ஆட்சியில்!

சங்க காலத்தில், இருந்த தமிழரசு, காதல் மணம், முத்தமிழ், ஊர்ப் பொது மன்றங்கள், அறங்கூறு அவையம், கோவில்களில் கல்விக்கூடம், அறமன்றம், கலைக் கூடம், பாலாவியன்ன மேலாடை, போரிடும் பண்பு, அரசியல் நடத்த ஐம்பெருங் குழு, எண் பேராயம் முதலியவை இல்லை ஜவஹர்லால் ஆட்சியில்!

இவ்வாறே எழுதிக்கொண்டிருப்பின், ஜவஹர்லால் ஆட்சியில் தென்னாடு—திராவிட நாடு எவ்வளவு தூரம் புறக்கணிப்பு வேலைக்குட்பட்டிருக்கிறது என்ற கேள்விக்குரிய பதிலை எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் எழுதிக்கொண்டே இருக்கலாம்.

முடிவு இல்லாமல், முழுமையும் இறந்த காலத்திலிருந்து நிகழ் காலம் உட்பட எதிர்காலம் வரை புறக்கணிக்கப்பட்டே வந்தால்—அந்த நாடு எப்பொழுதும் தூங்கிக்கொண்டேயிருக்குமா?

அரசியல்வாதிகள் — அவர்கள் எக் கட்சியைச் சார்ந்தவராயினும் சரியே—நேர்மை என்ற முறைப்படி அவர்கள் கண்ணோட்டத்தை, இந்தியத் துணைக் கண்டத்

தின் வட பாகத்திலும், தென் பாகத்திலும் செலுத்திப் பார்த்தால் கிடைக்கும் பதில் எதுவாக இருக்க முடியும்?

மார்க்ஸியம் பேசும் மதிப்பிற்குரியத் தோழர்கள்—எஞ்சல்ஸை எடுத்துக் காட்டுபவர்கள் — இங்கர்ஸாலே இறக்குமதி செய்பவர்கள்—சோஷலிஸ சிற்பிகள்—அகில உலக அரசியல் பேசும் அன்பர்கள் அத்தனைபேரும், சிந்தித்துப் பார்க்க வேண்டும்!

வரும் புதிய தமிழகத்தில் சாதியுண்டா? வருணாசிரமம் பேசும் வம்பருண்டா? சேரி என்றும் அக்ரஹாரம் என்றும் பேதமுண்டா? வறுமை யுண்டா? வஞ்சகமும் பஞ்சைகளும் வாழ்வதுண்டா? பெரும் பண்ணை, மிட்டா, மிராசு உண்டா? பிழிந்தெடுத்த சக்கையாக இயங்கும் உழவன் உண்டா? அடிமை உண்டா? மன்னருண்டா? மடாதிபதிகள் உண்டா? கருஞ் சந்தைக்கு பேரர் உண்டா? என்றெல்லாம் தமிழ் நாட்டு மக்களின் இதய தாகமாக யிருந்து, கேள்வி உருவிலே வெளியேற ஆரம்பித்துவிட்டன.

எனவேதான் மாற்றுக் கட்சிக்காரர்களாக யிருந்தாலும், நாட்டின் நிலையினைக் காணுங்கள். காணுவதோடு வாளாவிருந்துவிட வேண்டாம். வளமைக்கு வழி தேடுங்கள் என்று முரசு முழங்குகின்றனர் நாட்டின் மீட்சியிலே—வளப்பத்திலே — வளர்ச்சியிலே நாட்டங்கொண்டுள்ள நல்ல இதயம் படைத்தவர்கள்!

ஐக்கிய மாகாண ஸ்தல ஸ்தாபன வாக்காளர் பட்டியலில் ஜாதி வித்தியாசங்கள் ஒழிக்கப்பட்டுள்ளன. இனிமேல் ஒரு வாக்காளர் இந்து, முஸ்லீம், சீக்கியர் என்று மட்டும்தான் குறிப்பிடப்பட்டு வருவார். சாதி உட்பிரிவு

கள் குறிப்பிடப்பட மாட்டாது. அரசாங்க தஸ்தா வேஜுகளிலும், கல்வி ஸ்தாபனங்களிலும் இந்த ஜாதிப் பிரிவுகளையும், வித்தியாசங்களையும், அகற்றும்படியும் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதாகத் தெரிகிறது. சென்னை அரசாங்கம் இதுபோல் ஏன் செய்யக்கூடாது? என்று ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தேழாம் ஆண்டி லேயே திராவிட இயக்கம் தான் கேட்டது. அதற்கு இன்று வரையிலும் அரசாங்கம் என்ன பதில் தந்திருக் கிறது? எந்த முறையில் தந்திருக்கிறது?

வணிகத்துறையில் தான் திராவிடத்தை வாழவிட்டி ருக்கிறார்களா, வடநாட்டைப்போல? சிந்திக்கவேண்டும், ஏக இந்தியாக் கொள்கையினர்!

சிமெண்ட் தேவையா? அதற்கொரு டால்மியா!

இரும்பு வேண்டுமா? இருக்கிறார் டாடா!

பத்திரிகை படிக்கவேண்டுமா? பாருங்கள் **கோயங்கா!**

பாங்கி அலுவல்களுக்கு இருக்கவே இருக்கிறது **பாரத்!**

ஆடை- அணிகலன்களுக்கு அவசியம் நேர்ந்தால் **பஜாஜ்!**

சாயங்கட்கு, உலகப்பிரமுகர் **பிர்லா!**

உத்திரவு உதிர்க்கவேண்டுமா? சலோ **டில்லி!**

தீர்த்தம் அருந்துவதற்குத் திவ்யமானது **காசி!**

கட்டளை நடத்திக் கண்காணிக்க, **கயா!**

மடம் என்றால் அதன் உட்பொருள் **ஜீயர்!**

மற்றும் சங்கராச்சாரி பல்லாக்கு, தம்பிரானின் ஜடை• வைரமுடி, மலாயாவில் தமிழனின் மரணப்படுக்கை, சிலோ னில் தமிழனின் சீரழிவு, பர்மாவில் தமிழன் படும்பாடு,

ஆப்ரிக்காவில் தமிழ் தெரிந்தவன் அடையும் அல்லல். இவை போன்ற பல உடனடியாகக் கவனிக்கப்படவேண்டிய உயிர்ப்பிரச்னைகளை, என்றைக்கு, யார், எங்கே, எப்படிப்பேசுவது என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும்.

வடக்கு வாழவும் தெற்கு தேயவும் வழி வகுத்துக் கொடுத்துக்கொண்டிருக்கும் நிலையினை சிந்திக்கவேண்டும்.

ஆயிரத்துத்தொளாயிரத்துமுப்பத்தொன்பதிலிருந்து நாற்பத்து நான்கு வரை ஏற்பட்ட தொழிலாளர் எண்ணிக்கை வளர்ச்சியினைப் படம் பிடித்துக்காட்டுகிறோம்; மத்திய சமஷ்டியில் தமிழரசு இயங்கவேண்டும் என்று குறிப்பிடும் தமிழரசுவாதிகளுக்கும், ஏக இந்தியா வேண்டும் என்று சிந்துபாடும் தோழர்களுக்கும் சிந்திக்க வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கும் என்ற நம்பிக்கையால்!

| சர்க்கார் தொழிற்சாலைகளில் | பிற தொழிற் சாலைகளில் | மாநிலம் |
|---|---|---|
| 43,000 | 1,34,000 | பம்பாய் |
| 36,000 | 67,000 | வங்காளம் |
| 25,000 | 49,000 | ஐக்கியமாகாணம் |
| 30,000 | 26,000 | பஞ்சாப் |
| 5,000 | 45,000 | சென்னை |

பம்பாயில் மொத்தம் 1,77,000பேர். வங்கத்தில் மொத்தம் 1,03,000பேர். ஐக்கியமாகாணத்தில்மொத்தம் 74,000 பேர். பஞ்சாப்பில் மொத்தம்56,000பேர், சென்னை மாநிலத்திலோ 50,000 பேர்.

பம்பாய் மாநிலத்தில் தொழிற்சாலைகளும், சென்னை மாநிலத்தில் தொழிற்சாலைகளும் இத்துடன் காட்சியாக்குகிறோம், கவனத்திலிருத்தி சிந்திக்கவேண்டும் என்பதற்கா

கவும், சிந்தனையின் முடிவுப்படி நடக்க, நிந்தனைகள் தடையாய் வந்தாலும், நொந்து போகாமல், ஆக்கவேலைகட்கு, ஒற்றுமைப்பாதை போட்டுக்காட்டட்டும் என்ற உயரிய நோக்கோடு!

| மாநிலம் | துணி | பட்டு | கம்பளி | சணல் | சர்க்கரை |
|---|---|---|---|---|---|
| பம்பாய் | 203 | 50 | 5 | 40 | 10 |
| சென்னை | 64 | இல்லை | இல்லை | 2 | 11 |

எங்கே வளமிருக்கும்? வாழ்விருக்கும்? நிலை உயரும்? நினைவு வளரும்?

இதனை யெல்லாம் சிந்தித்துப் பார்க்கவேண்டாமா? இதனை யெல்லாம் தெரிந்து கொண்ட பின்பு—தெளிந்த நெஞ்சத்தோடல்லவா, அரசியல் விவகாரத்தை, ஐக்கியத் தமிழகத்திலோ, அகில இந்தியாவிலோ, அகில உலகிலோ, பேசவேண்டும்?

தென்னாட்டில் தொழிற்சாலைகள் நிறுவினால்,தொழில் பார்க்க ஆட்கள்-தொழிலாளர் இல்லாமல் சாலைகள் பூட்டப்பட்டுவிடும் என்ற நோக்கத்தாலா, வடக்கில் மட்டும் வளத்தை உண்டாக்கிக் கொள்கிறார்கள்?

வடக்கில் வாழ்பவர் தான் மக்கள் தெற்கில் வாழ்பவர் மாடுகள் என்ற எண்ணமா? ஏன் இந்தப் பேதம் என்று எதிர்த்துக்கேட்கும் திராவிட இதயங்களை கிண்டல்மொழி சாற்றி, கேவலப்படுத்தி விடலாம் என்ற மட்டரகமான அரசியல் 'பாலிஸி'யையல்லவா தன்னகத்தே ஆட்படுத்தி வைத்துக்கொண்டிருக்கின்றனர், ஏக இந்தியாக் கொள்கையினர்.

விருப்பு வெறுப்பின்றி ஆராயட்டும் வடக்கையும் தெற்கேயும்! உண்மையான சோஷலிஸக் கோட்பாட்டுப்

படி—மார்க்ஸிய மாண்புப்படி—மாஸேதுங்கியப்படி—ஜனநாயக நம்பிக்கைப்படி—நாட்டின் மேல் உண்மையான அக்கரை கொண்டு ஆராய்ந்து பார்க்கவேண்டும்,ஏக இந்தியா கொள்கையினரும், ரயில், தபால், தந்தி, போக்குவரத்து முதலிய இலாக்காக்களை மத்திய அரசாங்கத்திடம் கொடுத்துவிட்டு மொழிவழி அரசு புரிகிறோம் என்று கூறக்காத்துக்கொண்டிருக்கும், தமிழரசுவாதிகளும்!

வடக்கு மட்டும் வளமாக வாழவும், தெற்கு தேய்ந்துகொண்டே மாளவும் தானு ஏக இந்தியா கொள்கையினர் பாடுபட்டனர்? என்று எதிர்கால தென்னுட்டு மக்கள், அவர்களுக்கு வசை புராணம் பாடி வைக்க இடமளிக்கக்கூடாது என்பதற்காகத்தான் இதனை எடுத்துக்கூறும் அவசியம் ஏற்படுகிறது.

இந்த நேரத்தில், சில ஐயங்களுக்குத் தெளிவேற்படுத்தவேண்டிய கடமையுணர்ச்சி நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

'திராவிடம் தனி நாடாக வேண்டும்' என்று கூக்குரல் போடுகிறார்கள், முடியுமா? என்ற கேள்வியைத் தான் அவர்களை நோக்கி நாம் கேட்கிறோம் என்ற எண்ணத்துடன் ஒரு சிலர் உலவுகிறார்கள்.

'ஆரியராவது?திராவிடராவது?'எல்லாம் ஏமாற்று வித்தை! என்று பதில் தரும் சிலர் உலாவுகிறார்கள்.

ஏகோபித்த சக்தி சிதறிப்போக வேண்டுமென்று சொல்லுகிறார்களே என ஏக்கச்சிந்து பாடுபவர்கள் உலவுகிறார்கள்.

ஆரியர்—திராவிடர் என்னும் அறிவீனத்தைப்பற்றி அழகாக எழுதிவிட்டார் நம் கீழ்ப்பாக்கத்தார் என்று. விபீஷணுழ்வார்களாக இயங்குபவர்கள் உலவுகிருர்கள்.

யாரையார் விரட்டுவது? என்று பயமுறுத்தல் படலத்தை நடத்திக்காட்டும் நப்பாசைகள் உலவுகிருர்கள்.

ஆந்திரா பிரிந்துவிட்டதே! இனி என்ன திராவிட நாடு? என்று ஏகத்தாளமிடுபவர்கள் உலவுகிருர்கள்

மத்திய ஆளுகைக்குட்பட்ட, மொழிவழி மாகாணமே தேவை. மற்றைய பிரிவினையில் அர்த்தமோ, அவசியமோ இல்லை என்று இயங்குபவர்கள் உலவுகிருர்கள்.

ஒரு சிலர், உண்மையான சந்தேகம் கொண்டவர்கள். வேறு சிலர், வேண்டுமென்றே விதண்டாவாதம் செய்பவர்கள். மற்றும் சிலர், எதையும் மறுத்துரைக்கும் மதி படைத்தவர்கள் பாக்கி சிலர் பச்சோந்தி வேடத்தில் கச்சிதமாக நடிக்கப்பழகிக்கொண்டவர்கள்.

என்ருலும், பொதுமக்களுக்கு, அதுபற்றி மீண்டும் நினைவுபடுத்தும் பணி நமக்கு ஏற்படுகிறது.

திராவிடம் தனி நாடாக முடியுமா? என்று கேட்பவர்களை—அவர்கள் விதண்டாவாதிகள் என்ற முறையில் விதண்டாவாதமாகத்தான் பதில் தருவோம் என்று நாம் பகர்பவர்களாக இருந்தால்.'முடியாதா? என்ற கேள்வியை மட்டும் போட்டு மௌனமாக இருக்கலாம்.

ஆனால், குற்றம் நீக்கி, குணம் நாடும் பரம்பரையினர் நாம், எனவே, எதற்கும் ஆத்திரத்தைத் துணைக்கழைப்ப

தில்லை,அறிவுக்கண்களை திறந்து விட்டிருக்கிறோம்-திறந்து கொண்டு வருகிறோம். அந்த முறையிலே தான், பதில் தர நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஸ்விட்சர்லாந்து, ஸ்பெயின், போர்த்துக்கல்,பிரான்ஸ் ஜெர்மனி, இத்தாலி, டென்மார்க், ஹாலந்து, ஸ்வீடன். நார்வே, செக்கோஸ்லோவேகியா, ருமேனியா, போலந்து, பின்லந்து, லாட்வியா, லிதுவேனியா, இங்கிலாந்து இவைகளை விடவா, கோரும் திராவிடம் சிறியது, வசதியற்றது?

இதனை, வரலாற்று வல்லுநர்கள் முடிவுக்கு விட்டு விடலாம்.

ஒரு ஜெர்மனி தனித்து வாழ்ந்ததோடு மட்டுமல்ல— உலகையே ஆட்டி வைத்தது!

ஒரு இங்கிலாந்து உலகெங்கும் தனிக்கொடியைப் பறக்கவிட்டுக்கொண்டிருந்தது!

இதனைவிடப் பலமடங்கு பெரிதான திராவிட நிலப் பரப்பு, அண்டை அயல் நாடுகளுடன் சண்டை போட்டு நாடு பிடிக்கும் மோகத்தில் இறங்காது. தன்னைத்தானே காத்துக்கொள்ளும் திறங்கூடவா அற்றுவிடும்?

'பாகிஸ்தான்' இந்தியத் துணைக்கண்டத்துக்கு பரிசார்க அரிசி வழங்கிய அளவு,திராவிடம் அடுத்தவர்க்கு அள்ளித் தரமுடியாவிட்டாலும் சுயதேவைப் பூர்த்தியை இழந்தா விடும்?

வெறும் நிலப்பரப்புமட்டுமில்லை நம்மிடம்! இயற்கை வளம் திராவிடத்தில் இரண்டறக்கலந்திருக்கிறது. துறை

முக வளம் திராவிடத்தின் துயர்துடைக்கும்! மலைவளம், மண் வளம், வளர்ந்துவரும் மதிவளம் எல்லாம் நிரம்பியது!

தங்கச்சுரங்கங்கள், இரும்பு தரும் கனிப்பொருள்கள் மிளகு, மாங்கனீஸ் முந்திரி இன்னும் பல உள்ளன திராவிடத்தில்!

திராவிடம் தனித்தியங்க முடியுமா? என்ற குரல் எழும்பும்போதுதான், 'பாகிஸ்தான் போக்கினால் இந்தியாவுக்கே அபாயம்' என்ற கூக்குரலும் எழுப்பப்படுகிறது என்பதை ஒவ்வொருவரும் மனத்திலிருத்திப்பார்க்கவேண்டும் என்று சொல்கிறோம்

இந்தியத் துணைக்கண்டத்தை விட எத்தனையோ மடங்கு சிறிய அளவுள்ளது பாகிஸ்தான். இந்தியத் துணைக்கண்டத்தின் உள்ளங்கையில் மோதிர விரல் அளவுள்ள நாடு பாகிஸ்தான். 'பகற்கனவு' என்று பரிகசிக்கப்பட்ட நாடு பாகிஸ்தான்.

அந்த நாட்டின் போக்கால் இந்தியத் துணைக்கண்டம் அச்சப்படுகிறது, ஆவேசப்படுகிறது, ஆயாசப்படுகிறது. அந்த அளவுக்கு, 'பகலிஸ்தானாக' சித்தரிக்கப்பட்டிருந்த பாகிஸ்தானால் செயல் செய்ய முடிகிறது.

அராஜகப்பாதையோ, அழிவுப்பாதையோ நமக்கு விருப்பமில்லாதது, வேண்டாதது என்ற போதிலும்கூட, உண்மை நிலையை எடுத்துக்கூறப்போகும்போது, 'பாகிஸ்தான்' தனியாக இயங்க முடியும், இந்தியாவுடனாவது, ரஷ்யாவுடனாவது, அமெரிக்காவுடனாவது ஒத்துழைப்பதால், என்பதை நிரூபித்துக்காட்டுவதை, வரலாற்று ஏட்டில் தீட்டாமல் இருக்க முடியாது!

அவ்வளவு ஏன்?

ஜெர்மனி, நாம் கோரும் திராவிட நாட்டை விடப் பெரியது அல்லவே! அப்படியிருந்தும் வல்லரசுகளையே வந்துபார் என்று ஐந்துவருட காலம் சவாலுக்கு நின்றதே!

இங்கிலாந்து, நாம் கோரும் திராவிட நாட்டைவிடச் சிறியதுதானே! அதன் ஆதிக்கம் இந்தியாவில் மிகவும் வேரூன்றி இருந்ததுவே! மறுக்கமுடியுமா யாராலும்? சூரியன் அஸ்தமிக்காத நாடு பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் ஒன்றுதான் என்று பெருமை கொட்டுமளவுக்கு, இயங்கி வந்ததுவே இங்கிலாந்து!

இதிலிருந்து நாம் தெரிந்துகொள்வது என்னவென்றால், சிறிய நாடாக இருக்கும் காரணத்தால் ஒரு நாடு தனித்தியங்க முடியாது என்று கூறுவது 'அபத்தம்' என்பது தான்.

பெரிய நாடாக இருப்பதுதான் சீனு, அது முன்பே விடுதலை பெற்ற நாடேதான். அப்படியிருந்தும், கோமின்டாங் சீனு; சிவப்புச் சீனுவாக மாறியது ஏன்? சிந்திக்க வேண்டும்.

பெரிய நாடாக இருந்தால் ஆபத்தில்லாமல் வாழவும், சிறிய நாடாக இருந்தால் ஆபத்து நேர்ந்து அல்லற்பட்டு மாளவும்தான் முடியும் என்று நினைப்பது முற்றிலும் தவறு என்பது, வரலாறு நமக்குக் கற்றுத் தந்திருக்கும் பாடம்.

'உரிமைக்கு எல்லை வேங்கடம், உறவுக்கு எல்லை இமயம்' என்று கூறுவோர், கொஞ்சம் குறுகிய மனப்பான்மையைவிட்டு, தமக்கென வாழா பிறர்க்குரியாளராக

இயங்க ஆரம்பித்தால், உரிமைக்கு எல்லை விந்தியம், உறவுக்கு எல்லை உலகமாகவே இருக்கட்டும் என்ற முடிவுக்கு வந்துவிடுவார்கள்.

எனவேதான், திராவிடம் விரைவில் மலர்ந்தே தீரும் எனக்கூறுகிறோம்.

தனித்தியங்க முடியாது என்றுரைக்கும் ஒரு சிலர் சிந்தித்துப் பார்க்க ஆரம்பித்து விட்டால், அவர்கள் உள்ளம் அவர்களுக்கு, நிச்சயம் 'மலரும் திராவிடம்' 'என்ற முடிவைத்தான் தரமுடியும்—தரவேண்டும்.

ஆரியராவது திராவிடராவது? எல்லாம் ஏமாற்று வித்தை! என்று வரலாறு தெரியாதவர்கள் கூறும் கூற்றையும் சிந்திக்க வேண்டும், பொதுமக்கள்!

தமிழ் நாட்டில், பழமொழி ஒன்று சொல்வார்கள். நெருப்பில்லாமல் புகையா? பருப்பில்லாத கல்யாணமா? என்று, ஒன்றையொன்று பிணைத்து, ஒன்றுக்கொன்று ஆதாரம் காட்டிப் பேசுவார்கள்.

ஒரு இடத்திலிருந்து 'புகை' வந்துகொண்டிருக்கிறது என்றால், நிச்சயமாக அந்த இடத்தில் நெருப்பு எரிந்துகொண்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்தது தான்.

அதைப் போலவே, 'ஆரியர்—திராவிடர்' என்று பேசப்பட்டால், பேச்சு வழக்கில் மட்டுமல்ல, நாட்டுப் பண்பாட்டிலும் அத்தகையோர் சித்தரிக்கப்பட்டிருக்கிறார் என்பது எளிதில் புலனாகும் எல்லோருக்கும்!

அடிப்படை இல்லாமல், எவ்வாறு கட்டடம் கட்ட முடியாதோ, அவ்வாறே ஆரிய திராவிட உணர்ச்சியில்லாமல், அதுபற்றி நாட்டிலே சம்பவங்கள் நிகழ முடியாது.

எனவேதான் சரித்திரப் பேராசிரியர்கள், பாரதி, டாகூர் போன்ற முக்கிய கவிஞர்கள் ஆரியத்தையும் திராவிடத்தையும் பற்றி எழுதியிருக்கிறார்கள்

'கால்டுவெல்' கூட, நான் மொழியால் தமிழன். ஆனால் அந்தத் தமிழ், திராவிட மொழி என்றுதான் குறிப்பிடுகிறார்.

கால்டுவெல், தமிழர் குலத்தில் தோன்றவில்லை. தமிழ் நாட்டுக்கு வந்த வேற்று நாட்டவர் – பாதிரியார்! ஒருசிலரால், 'அய்யர்' என்ற அடைமொழி கொடுக்கப்பட்டு மறைந்தவர். தமிழுக்காக உழைத்தவர். தமிழின் பெருமையை உணர்ந்தவர் - உலகுக்கு உணர்த்தியவர்.

அவர்தான், திராவிடமொழி 'தமிழ்' என்று கூறியிருக்கிறார், என்று சந்தேக விளக்கங்கள் கொடுத்த காலையிலே, 'ஆரியர்-திராவிடர் வேற்றுமைகள் வெள்ளைக்காரச் சரித்திர ஆசிரியர்களின் கற்பனை' என்று கூறத்தலைப்பட்டு விட்டார்கள்,

அதனையும் சிறிது ஆராய்வோம்!

வெள்ளைக்காரர்கள் என்ற காரணத்துக்காக, ஸ்மித், ஆலன், ரகோசின், வில்லியம்ஸ், ஹாவெல், ராலிஸன்ஸ், ஜான்ஸ்டென், கிரையர்சன், டிக்சன் ரிஸ்கி, மார்ஷல், ஹிராஸ், கால்டுவெல் முதலியவர்களை வேண்டுமானால், தூரத்திலேயே நிறுத்திவிடுவோம். அவர்கள், தங்களது ஆளுகையை இந்த நாட்டில் நிரந்தரமாக்கிக் கொள்

வதற்காக இந்த நாட்டு மக்களைப் பிரித்துப் பிரித்துக் கற்பனை செய்து எழுதி வைத்துவிட்டார்கள் என்பதாக வேண்டுமானால் நினைவுப்படுத்திக் கொள்வோம்.

சென்னை கடற் கரையிலே, ஓங்கி வளர்ந்திருக்கிறதே ஒரு சிலை! அதன் கீழே கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்பு என்ன என்றுவது பார்க்க வேண்டாமா? அந்தக் குறிப்பையுமா வெள்ளைக்காரன் எழுதிவிட்டுப் போனான்?

'திராவிட பூஷணம்' என்பது தானே, மகாமகோபாத்தியாய, டாக்டர் உ. வே. சாமிநாதய்யருக்குக் குறிக்கப்படும் பட்டம்! இதனையுமா, மறந்து—மறுத்து – மிதித்து விடவேண்டும்?

'ஆரிய நாடு' என்று குறிப்பிடும் சி. சுப்பிரமணிய பாரதியுமா வெள்ளைக்காரர்? அல்லது அவர் தம் தாசர்?

'திராவிட உத்கலவங்க' என்று இதய கீதம் எழுப்பிய ரவீந்திரநாத் தாகூருமா வெள்ளைக்காரர்?

சி. எஸ். சீனிவாசாச்சாரியார், கிருஷ்ணசாமி அய்யங்கார், மஜூம்தார், ரமேஷ் சந்தர்டட், ஹோஷிசந்திரடட், ராதகுமுத் முகர்ஜி, எ. சி. தாஸ், என். என். கோஷ் ஆகிய இந்திய வரலாற்று ஆசிரியர்களையும் வெள்ளைக்காரர்களின் பட்டியலில் இணைக்க முடியுமா?

பி. டி. சீனிவாச அய்யங்கார் எழுதிய 'இந்திய சரித்திரம்' என்ற புத்தகத்தில், "ஆரியம் பரவுவதற்கு முன், இந்தியாவில் நான்கு வருண பேதங்கள் கிடையாது. மணவிஷயத்தில் ஆரியரின் யக்ஞ முறை கிடையாது. வட இந்தியாவில் பேசப்பட்ட மொழிகள் கொஞ்சம் கொஞ்சமாக சமஸ்கிருதத்தில் கடன் வாங்கிய போதிலும், தென்னிந்

தியா சமஸ்கிருதத்துக்கு அடிமைப்படவில்லை. ஆரம்ப காலத்தில் மக்கள் பேசிவந்த மொழியின் நாகரீக உருவம் தான் தமிழ்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அத்துடன் அவர் விட்டுவிடவில்லை. அதனை அறிவற்ற வறட்டுத் தவளைகள் கற்பனை என்று சொல்லிவிடக் கூடாது என்பதற்காக, திராவிடத்தைப் பற்றியும் அவர் கருத்துக்களைத் தெளிவாகத் தெளித்திருக்கிறார்.

''நெருப்பின் மூலம் தேவனைத் தொழுதலை ஒப்புக் கொண்டவர்கள் ஆரியர்கள். இதை ஒப்புக்கொள்ளா தவர்கள் தஸ்யூக்கள் அல்லது திராவிடர்கள் என்றும் ஆனார்கள்''.

பி. டி. சீனிவாச அய்யங்கார், வெள்ளைக்காரர் என்று கூறிவிட முடியுமா? சீனிவாச அய்யங்கார்தான் தப்பித் தவறி, அவர்கள் பாஷையிலேயே கூறவேண்டுமென்றால், வகுப்புவாத கட்சிகளுக்கு ஆதரவு கொடுப்பவர் என்று முடிவுகட்ட முடியுமா?

எம். கே. சுந்தரவரதாச்சாரியார், என்ற இன்னொரு வரலாற்று ஆசிரியரும் தமது 'இந்திய சரித்திரம்' என்ற புத்தகத்தில் 12–13வது பக்கங்களில், தெளிவாகக் கூறி யிருக்கிறார்.

''ஆரிய, திராவிடர்களுடைய வெவ்வேறான தோற் றத்திற்கும், நடை, யுடை, பாஷை முதலியவற்றின் பேதங் களுக்கும், நாட்டின் இயற்கை யமைப்பும், வட இந்தியர்வி லிருந்தவர்களுக்கு ஏற்பட்ட கலப்பும், தென்னிந்தியாவி லிருந்தவர்களுக்கு அவ்வாறான, கலப்பின்மையும், சிறந்த போக்குவரவுக்கான சாதனங்களும், ஒற்றுமைக்கு வேண்

டிய மற்ற அனுகூலங்களும் இல்லாததனுல் இவர்கள் ஒருவரோடொருவர் கலந்து உறவாடக்கூடாமையுமே முக்கிய காரணங்களாகும்

அன்றியும் வடநாட்டின் மீது படையெடுத்தும், சௌகரியத்தை நாடியும் வந்த கிரேக்க, யவனர்களும், சாகர், பாரசீகர், முதலானவர்களும், ஆரியர்களான உத்தர தேசத்தவர்களும் கலந்து கொஞ்சம் கொஞ்சமாகத் தாங்களும் மாறி அவர்களையும் மாற்றிவிட்டாற்போல', தென்னிந்தியாவில் யாதொன்றும் நடைபெறவில்லை. விந்திய சாத்பூரா மலைகளையும், நருமதையாற்றையும் கடந்து தென்னிந்தியாவுக்கு வருவது மிகக் கஷ்டமா யிருந்ததுமல்லாமல், தென்னிந்திய திராவிடர்களும் அவர்களை வரவொட்டாமல் தடுத்துவிட்டனர். ஆகையினுல்தான் வட இந்தியாவிலிருந்தவர்களுக்கும், தென்னிந்தியாவிலிருந்தவர்களுக்கும் வித்தியாசங்கள் பெருகிவிட்டன."

இந்தச் செய்தியினை, ஒரு பெரியாரோ, ஒரு அண்ணுதுரையோ கூறவில்லை. எம். கே. சுந்தரவரதாச்சாரியார் என்ற வரலாற்று ஆசிரியர், தாம் எழுதியுள்ள 'இந்தியர் சரித்திரம்' என்ற நூலில் குறித்துள்ளார்!

இவரும் வெள்ளைக்காரரோ, என்று சந்தேகப்படக்கூட இடமில்லாதவாறு, ஆச்சாரியார் என்ற பெயரைத் தன்னகத்தே கொண்டவர் திரு. எம். கே. சுந்தரவரதாச்சாரியார்!

அய்யர், அய்யங்கார், ஆச்சாரியார், சாஸ்திரிகள் போன்றவர்கள் எழுதிய வரலாற்றுப் புத்தகங்களே, ஆரிய திராவிடப் பிரச்சனை கற்பனையல்ல என்று சாட்சியம் கூற முன் வந்துகொண்டிருக்கும்போது, 'ஆரியரா

வது? திராவிடராவது?' என்று ஒரு சிலர் கூச்சலிட்டால், அந்த ஒரு சிலரை என்ன பெயரிட்டு அழைப்பது?

வரலாறு அறியாதவர்கள் என்று பொதுப் படையாகக் கூறிவிடலாம். ஆனால் விதண்டாவாதத்துக்கு கூறுபவர்களை என்ன பெயரிட்டு அழைப்பது?

கதிரவனைக் கைக்குடையால் மறைத்துக் கொண்டு, கதிரவனே கிடையாது பாருங்கள், என்று கூறும் ஒரு புத்திசாலிக்கும், இருப்பதை இல்லை என்று கபோதிக் கற்பனையால் பார்க்கும் விதண்டாவாதிக்கும் என்ன வேற்றுமை இருக்க முடியும்?

திராவிடரைக் குறித்து இந்த ஆதாரங்கள் போதாது என்று அந்தத் தீவட்டிகள் கருதினால், இன்னும் தேடித் தருகிறோம், ஆதாரங்களை! அதனைப் பார்த்துத் தேர்ந்தாவது தெளிவில்லா நெஞ்சங்கள் தெளிவடையட்டும்!

அடுத்தபடியாக, திராவிடத்தில், நாட்டின் முன்னேற்றத்துக்கு அடித்தளமிடும் மூலப் பொருள்கள் அனைத்தும் கிடைக்கின்றன. மறுத்துரைப்போர் தக்க ஆதாரங்களுடன், வாதத்துக்கு வந்தாலும் வரவேற்கிறோம் விளக்கம் கூறுகிறோம்,

இரும்பு, மக்னீஷியம் போன்ற உலோகப் பொருள்கள் திராவிடத்திலே—குறிப்பாகத் தமிழகத்திலே கிடைக்கின்றன. தங்க வயல் என்றே பொறிக்கப்படும் பொன் முத்திரைக்குள் தங்கக் காடே இருக்கிறது! நாட்டின் பொருளாதார அணியை அணி செய்து, ஏனையநாடுகளுக்கும் எடுத்துக் காட்டாகத் திராவிடத்தை விளங்கச் செய்வதற்கு, திராவிடத்தில் 'கோலார்' இருக்கிறது என்பதை கோணல் மதியற்றவர்கள் நன்கு தெரிந்திருக்கலாம்.

குமரிமுனையிலே, 'இல்மெனைட்' கிடைக்கிறது. அது, அலுமினியத் தொழிலுக்கு சாதனமாக விளங்குகிறது. தென் ஆற்காடு மாவட்டத்திலே நிலக்கரிச் சுரங்கங்கள், இருக்கின்றன என்று கண்டு பிடிக்கப்பட்டு, ஆவன செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. சேலம் மாவட்டத்திலே, 'மேக்னஸைட்' கிடைக்கிறது. இதனால், கண்ணாடி காகிதம், ரப்பர் முதலியவற்றின் உற்பத்தியும், விமானம் கட்டும் வேலையும் எவ்வளவோ எழிலோடு இயங்குமென்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவு!

உணவுப் பொருள்களுக்கு, தஞ்சை மாவட்டம் ஒன்றே போதுமென்றாலும், உடன்வரத்தான் செய்வேன் என்ற நோக்கோடு திருநெல்வேலி மாவட்டமும் சேர்ந்து கொள்ளும்போது, திராவிடம் எப்படிப் பற்றுக்குறைப் பிரதேசமாக முடியும், நிர்வாகத் திறமையை செலுத்தினால்!

'கொள்வார் தம் பேரோதை, கொடுப்பார் தம் சீரோதை' என்று புகழப்பட்ட நாடு நம் நாடு!

'சோழவள நாடு சோறுடைத்து' என்ற பாராட்டுப் பெற்ற நாடு நம் நாடு!

'வேழமுடைத்து!' 'முத்துடைத்து' என்றெல்லாம் மோகன வாழ்த்துப் பெற்ற நாடு நம் நாடு!

சந்தனக்காடுகள், மிளகுத் தோட்டங்கள், ஏலக்காய் கொத்துகள், கிராம்பு. தந்தம் வாழை நெல், முதலிய வகை வகையான விளையாட்டுக்களின் உரிமை வீடு, நம் நாடு!

அரசாங்கத்தை அசைய விடாமல், அட்சரம் பிசகாமல், நடத்தி, வாழ்வு கோரும் மக்களுக்குவளமையைத் தா

வாய்ப்பளிக்கும் போக்கு வரத்து சாதனங்கள்தான் போதாதா நமக்கு ?

தற்பொழுது அமுலிலிருக்கும் வரிகளில் எண்ணற்ற வரிகளை நீக்கிவிட்டே அரசாங்கத்தை நடத்த இயலுமே, தனி ஆட்சியின் மூலம்!

'பிரதேச பாஷைக்கு முதலிடம் தரப்படும்' என்று பேச்சளவில் பிதற்றிவிட்டு, மூச்சளவில் தமிழைத் தாழ்த்தி வைத்திருக்கும் காட்டுமிராண்டித் தனத்துக்கு முடிவு கட்டி அரியாசனத்தில் அமரச் செய்யலாமே தமிழ் தாயை !

'பழையன அனைத்தையும் கொளுத்தச் சொல்கிறார்களே பாதகர்கள்' என்ற நயவஞ்சகப் பிரசாரத்தை எதிர்த்து திருக்குறளுக்கு முதலிடம் கொடுத்தல்லவா, திராவிடத்திட்டம் தீட்டப்படும் தனியரசில்!

தபால் தந்தி இலாகாவின் உதவியால், திராவிடத்தை, மாஸ்கோவுக்குக்கூட உதாரண நாடாக ஆக்கிக் காட்ட முடியுமே பிரிவினைக்குப் பின்!

அறநிலையங்கள் — இனும்கள் இவற்றில் முடங்கிக் கிடக்கும் கோடிக் கணக்கான பணம் ஆயிரக் கணக்கான தொழிற்சாலைகளில், பல கோடி பாட்டாளி மக்களுக்கு வாழ்வுதரும் விதமாக வன்றோ, உடனடியாகச் சட்டமியற் றப்படும் திராவிடக் கூட்டாட்சியில்!

அகில உலககும், 'இன்பத் திராவிடத்தின் வாய் அசையாதா?' என்று எதிர்பார்த்து ஏங்கிக் கிடக்கும் சூழ் நிலையை அடுத்தவர் உதவியின்றி, நிர்மாணித்துக் காட்ட முடியுமே நம்மால்!

அதிலும், தெக்கும், அழியாக்குன்றும் நிறைந்த நம் திராவிடம், அழகாய் முத்துக் குவியும் கடல்கள் சூழ்ந்த நம் திராவிடம், முகிலும், செந்நெல்லும் முழங்கு நன் செய்யும் முல்லைக்காடுமன்றோ முறுவலிக்கிறது, நம்மைச் சுற்றி!

உலகம் முழுமைக்கும் கடன் கொடுத்த மொழி நம் தமிழ் மொழி – திராவிட மொழிதான் என்பதை எவரா லும் மறுத்துரைக்க முடியுமா?

நெசவுத் தொழில் மூலம் ஞாலத்தையே வியப்புக் கட லில் மூழ்கடித்து, நெஞ்சுயர்த்தி உலா வந்த நாடு திராவிட நாடு என்பதை எவரால் மறுக்க இயலும், தக்க ஆதாரம் காட்டி?

அய்ம்பத்தாறு தேசங்களாக இருந்த காலத்திலும், மூன்று மாநிலங்களாக பிரிக்கப்பட்டிருந்த காலத்திலும், சீரோடு வாழ்ந்திருந்த நாடு திராவிட நாடு என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறதே நாட்டு வரலாறு!

அக்பராலும், ஔரங்கசீப்பாலும், யாராலுமே, அடிமைபடுத்த முடியாமல் தமிழாட்சி புரிந்து தலை நிமிர்ந்து வாழ்ந்த நாடு திராவிடநாடு தான் என்பதை வரலாற்று ஆசிரியர்கள் வரையறுத்துக் கூறியிருக்கிறார் களே!

நிர்வாகத்துக்காக, இந்தியத்துணைக் கண்டத்துடன் திராவிடம் இணைக்கப்பட்டதுதான் என்பதை, வெள்ளைக் காரர்கள் ஆட்சியிருந்த காலத்திலும் தெள்ளத்தெளியத் தெரிந்துகொள்ளலாமே, மக்கள்!

திராவிடம் மலர்ந்தால், ஆமதாபாத், பம்பாய், டில்லி

முதலிய பிரதேசங்கள், 'மார்க்கெட்' இல்லாமல் க்ஷீண திசையடைந்துவிடும் என்ற காரணத்திற்காக, திராவிடத்தை தேய்விடமாக ஆக்கிக்கொண்டிருக்கவேண்டுமா?

திராவிடம் மலர்ந்தால், ரயில்வே முதலிய போக்குவரத்திலாகா பணம், டில்லிக்குக் கிடைக்காதே என்ற வஞ்சப் போக்கால் 'கொள்ளி' வைக்கலாமா திராவிடத்தில்?

ஆராயும் திறன் படைத்தவர்கள்-அரசியல் ஆய்ந்தறிவாளர்கள்— பொருளாதாரப்புள்ளி விவரங்கள்தெரிந்தவர்கள்-தாய்மொழிப்பற்றுக் கொண்டுள்ளவர்கள்-நன்கு சிந்திக்கவேண்டும்.

'என்ன இருக்கிறது?' என்று கேட்கும்,ஏஜேதாஜேக்களுக்கு, 'என்ன இல்லை, திராவிடத்தில்?' என்ற கேள்வியைத்திரும்பத்தருகிறோம், அரசியல் ஆய்வு பெறட்டும் என்ற நோக்கோடு!

வீணுக்கு மாவு இடித்த கதைபோல, இன்னமும் மேலிடத்தார் இயங்கி வருதல் அவ்வளவு அழகல்ல—அரசியல் முறையல்ல—திறமைக்கு எடுத்துக்காட்டல்ல என்பதைப் படம் பிடித்தாற்போல், காட்டியும், இன்னமும் சிந்தனைக்கு வேலை தாராமல், திட்டுவதே தொழிலாக—பணம் திரட்டுவதையே நோக்கமாக — அடக்கி ஆள்வதையே கௌரவமாகக்கொண்ட வர்க்கத்தினருக்கும் புத்திபுகட்டி, திராவிடத்தைப் பிரித்து. மீண்டும் பண்டைப்பெருமையோடு உலகுக்கெல்லாம் உயர்வு சொல்லி வாழ,மக்களிடம் என்றும் மாறா மனப்பான்மை ஊறிவிட்டது.

அந்த மனப்பான்மை தான், திராவிட முன்னேற்றக்

கழகமாக—மக்கள் சக்தியாக-பகுத்தறிவுப் பாசறையாக-நாட்டின் இதயமாக—பிரிவினைப் போர்ப்படையாக உருவாகி வலிவடைந்து நலி நீங்கி நாட்டுமக்கள் நல்வாழ்வு வாழத் துயர்துடைக்கும் மாபெரும் இயக்கமாக—திராவிட கூட்டாட்சி நிறுவப்பாடுபடும் இயந்திரமாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

வாழநினைப்பவர்களின் இதயகீதமாக விளங்குவது திராவிட முன்னேற்றக்கழகம் தான்.

திராவிட முன்னேற்றக்கழகத்தின் தலையாய கொள்கை, வடநாட்டுப்பிடியிலிருந்து, திராவிடத் திருநாட்டுக்கு விடுதலை வாங்கி, மொழித்துறையிலும்,இனத்துறையிலும், பொருளியல் துறையிலும், அரசியல் துறையிலும் அடிமையற்ற-உரிமை பெற்று—உயர்வு பெற்ற—உவகை பெற்ற நாடாக விளங்கச் செய்யவேண்டும் என்பது!

ஆந்திரம், கேரளம், கன்னடம், தமிழகம் ஆகிய நான்கு நிலப்பரப்புகளும் தத்தம் மொழிவழி பிரிந்து, வடநாட்டு தொடர்பை ஆதிபத்யமுறையிலிருந்து அறுத்து உலகுடன் உறவாட உலகப்பொதுமொழியிலேயே உலகியல் துறையில் உலவவும், நான்கு மொழிவழி மாநிலங்களும், குறிப்பிட்ட ஒப்பந்தங்களுக்கிடைய கூட்டாக ஒரு அரசாங்கத்தை நிறுவி, நடக்கும் ஆட்சிமுறையைத்தான் வற்புறுத்தி,'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற உரிமை முழக்கம் எழுப்புகிறது திராவிட முன்னேற்றக்கழகம்,

அமெரிக்காவிலே 42 ஸ்டேட்டுகள் இயங்குகின்றன என்று அபரிதமான பெருமையோடு, சொல்லோவியங்களை உதிர்க்கும் சூரர்கள், யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் ஸோவியத் ரஷ்யா என்று பொதுவுடமை பேசும் நண்பர்கள் ஒன்

றுக்கொன்று உறவுள்ள—தொடர்புள்ள-நெருங்கிய சம்பந்தமுள்ள நான்கு மொழிவழி மாநிலங்கள் திராவிடத்தில் இயங்க முடியாதா? என்ற நிலையினைச்சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்த நேரத்தில் தான், நம் மதிப்பிற்குரிய கம்யூனிஸ்டு நண்பர்கள், 'ஆந்திரா பிரிந்து விட்டதே! இனி என்ன திராவிடநாடு?' 'ஆந்திரா பிரிந்த அன்றே திராவிட நாடு செத்துவிட்டது' என்றெல்லாம், பேசினார்கள்-எழுதினார்கள்-மகிழ்ந்தார்கள், மாற்றானிடம் எதையோ சாதித்து விட்டதைப்போல!

உண்மை நிலைமை-உண்மையிலேயே நாட்டின் மேல் பற்றுதல் இருக்குமானால், மதிப்பிற்குரிய கம்யூனிஸ்ட் நண்பர்கள், மீண்டும் சிந்திக்கவேண்டும்.

'அரசியல்' என்ற பதத்துக்கோ, 'அரசாங்கம்' என்ற சொல்லுக்கோ, முக்கியத்வம் கொடுத்து, தீர ஆலோசித்துப்பார்த்தால் நன்கு விளங்கும் திராவிடநாடு பற்றிய பிரச்னை!

ஏங்கல்ஸூம், மார்க்ஸூம் எழுதிய புத்தகங்களை யெல்லாம் படிக்காவிட்டாலுங்கூட அவர்கள் எழுதியுள்ள மிக மிக முக்கியமான புத்தகங்களில் சிலவற்றையாகிலும் படித்துத்தெரிந்து கொள்ளப் பழகிக்கொள்ளவேண்டும் என்று உபதேசம் புரிந்த புதுமையுலகு சமைத்த புத்துலகச்சிற்பி V. I. லெனின் அவர்கள் 'ஸ்வர்டலாவ்' சர்வகலாசாலையில் 1919ம் ஆண்டு ஜூலை திங்கள் பதினொன்றும் நாள் நிகழ்த்திய சொற்பொழிவில், மாணவர்கள் உள்ள நிலத்துக்கு விதைத்த கருத்து விதைகளைத்தருகிறோம், மதிப்பிற்குரிய கம்யூனிஸ்ட் நண்பர்களுக்கு!

"அரசாங்கத்தைப்பற்றிய எல்லாப் பிரச்னைகளையும் நீங்கள் (அதாவது மாணவர்கள்) நன்றாகத்தெரிந்து, தெளிவு கொள்ள விரும்பினால், என் பேச்சைச்கேட்டுமுடிந்தவுடன், உங்களுக்குப்புரியாத விஷயங்களை, உங்களுக்குத் தகுந்த தெளிவையும், விளக்கத்தையும் தராத விஷயங்களை-சிக்கலான விஷயங்களைக் குறிப்பெடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். மீண்டும் அதைப்படித்துப் பார்க்கவேண்டும். அப்போதும் புரியவில்லை யென்றால், மூன்றும்தடவையாகப் படித்துப்பார்க்கவேண்டும். அப்போதும் புரியவில்லை யென்றால், பன்னிப்பன்னி அதைத்திரும்பத் திரும்பப் படிக்க வேண்டும். இவ்விதம் நீங்கள் முயன்று கற்கத்தொடங்க வேண்டும். இந்த விஷயம் குறித்துப்பேசும் இடங்களுக்குச் சென்று செவி கொடுக்கவேண்டும். ஆராய்ச்சி நடைபெறும் போதும், நீங்கள் கலந்து கொள்ளவேண்டும். இவ்விதம் நீங்கள் முயல்வதன் மூலம் நீங்கள் விளங்காதவைகளை விளக்கிக்கொள்ளலாம். சிக்கல்களைத் தீர்த்துக்கொள்ளலாம். நல்ல அனுபவம் பெறலாம். இவ்விதம் நீங்கள் உங்களைத் தயார் செய்துகொள்ளுங்கள். மேலும் சிக்கல்கள் தீரவில்லை யென்றால், அதற்குள் நாம் மீண்டும் சந்திக்கும் வாய்ப்பு நேரும். அந்தச்சமயத்தில் உங்களின் சந்தேகங்களை, கேள்வி உருவமாக மாற்றி என்னிடம் அனுப்புங்கள். அபிப்பிராயங்களையும் தாராளமாகப் பரிமாறிக் கொள்ளலாம். அதன் பிறகு உங்களுக்குத் தெளிவைத் தராமல் தடுத்தது எது என்பதை நீங்கள் கண்டிப்பாய் உணர்ந்து கொள்ளமுடியுமென்று நான் நிச்சயமாய்க் கருதுகிறேன்."

"அரசாங்கம் என்னும் இந்தப்பிரச்னையை பூர்ஷ்வா விஞ்ஞானத்தாலும், பூர்ஷ்வாவாதத்துவத்தாலும், பூர்ஷ்வா நீதியின் பேராலும், பூர்ஷ்வா அரசியலாலும், பூர்ஷ்வா

பொருளாதரத்தாலும், பூர்ஷ்வா பத்திரிகையாளும்,பூர்ஷ்வா கலையாலும் முன் யோசனையுடனும், முன்யோசனையே இல்லாமலும் குழப்பப்பட்டிருக்கின்றன. இந்தப்பூர்ஷ்வாக் கொள்கையின்படி அரசாங்கம் அலக்கழிக்கப்பட்டபடி-சிதைக்ககடிக்கப்பட்டபடி– குழம்பியிருக்கிறபடி வேறு எந்தப்பிரச்னையும் குழப்பப்படவில்லை. சிதைக்கடிக் கப்படவில்லை, அலக்கழிக்கப்படவில்லை, என்பதை நீங்கள் நினைவுப்படுத்திக்கொள்ளவேண்டும்.இன்று கூட இந்தப் பிரச்னையை, மதங்களில் கூட்டியும் குறைத்தும் காட்டு கின்றனர் மதங்களின் பிரதிநிதிகள். அவர்கள் அப்படிச் செய்யவில்லை என்ருல், அவர்களால் வாழ முடியாதல்லவா? ஆகவே அவர்கள் குழப்புகிருர்கள்."

"எப்பொழுது சமுதாயம் வர்க்கங்களாகப் பிரிகிற தோ—அதாவது ஒரு சில கூட்டத்தினர் மற்றவர்கள் உழைப்பை அபகரிப்பதற்கு ஏற்ற முறையில்—மற்றவர் களைச்சுரண்டுவதற்குத் தகுதியான முறையில் மக்கள் சமூகம் எந்த இடத்தில் எந்த நேரத்தில் பிரிகிறதோ,அந்த இடத்தில் அந்த நேரத்தில் மக்களுக்குப் பலாத்காரம் இழைக்கும் சிறந்த கருவியாக அரசாங்கம் தோன்றிற்று என்பதை நமக்குச்சரித்திரம் சுட்டிக்காட்டுகிறது. சமூகத் தின் இந்த வர்க்கப்பிரிவுகள் சரித்திரத்தின் அடிப்படை உண்மை என்பதை நாம் எப்போதும் தெளிவாக உணர்ந் திருக்கவேண்டும்."

"கேட்டதுடன் நின்றுவிடவேண்டாம். சிந்தியுங்கள். நல்ல தெளிவு பிறக்கும்!"

நம் மதிப்பிற்குரிய கம்யூனிஸ்ட் நண்பர்கள் சிந்தித் துப்பார்க்கவேண்டும். தோழர் லெனின் கூறியவை

என்பதற்காகவே, அவரது சொற்பொழிவிலிருந்து ஒரு சில மட்டும் பார்வைக்காகக் காட்டப்பட்டிருக்கிறது.

உங்களுக்குத் தகுந்த தெளிவையும் விளக்கத்தையும் தராத விஷயங்களையும்—சிக்கலான விஷயங்களைக் குறிப்பெடுத்து வைத்துக்கொள்ளவேண்டும். மீண்டும் அதைப் படித்துப் பார்க்கவேண்டும். அப்போதும் புரியவில்லை என்றால், மீண்டும் படித்துப் பார்க்கவேண்டும். அப்போதும் புரியவில்லை யென்றால், பன்னிப்பன்னித் திரும்பத் திரும்பப் படிக்கவேண்டும்.இவ்விஷயம் குறித்துப் பேசும் இடங்களுக்குச்சென்று செவி கொடுக்கவேண்டும். ஆராய்ச்சி நடைபெறும் போதும், நீங்கள் கலந்துகொள்ளவேண்டும்.இவ்விதம்நீங்கள் முயல்வதன்மூலம்,நீங்கள்விளங்காதவைகளை விளக்கிக்கொள்ளலாம் சிக்கலை தீர்த்துக் கொள்ளலாம். நல்ல அனுபவம் பெறலாம்.

கம்யூனிஸ்ட் நண்பர்கள் கவனத்தைத் திருப்பியேயாகவேண்டும். தோழர் லெனின் கூறிய வார்த்தைகளை மனதில் பதிய வைத்திருப்பார்களேயானால் - உண்மையிலேயே தெரியாவிட்டால்—சந்தேக விளக்கம் கேட்பவர்களேயானால்—மதிப்பிற்குரிய அருமைக் கம்யூனிஸ்ட்நண்பர்கள், சிந்தித்துப்பார்த்திருக்கவேண்டும். விளங்கவில்லையென்றால் தோழர் லெனின் குறிப்பிட்டதுபோல, பன்னிப் பன்னித் திரும்பத்திரும்பப் படித்துப் பார்த்திருக்கவேண்டும், திராவிடநாடு கோரிக்கை பற்றி!

ஆனால், கம்யூனிஸ்ட் நண்பர்கள் அதுபற்றி கவனம் செலுத்தவோ,கவலைப்படவோ, முயற்சி செய்யவோ முயலவில்லை. முயன்றிருந்தால், ஆந்திரா பிரிந்த அன்றே, திராவிடநாடு செத்துவிட்டது என்றுகூறியிருக்கமாட்டார்கள்,

இந்தியாவுக்குச் சுதந்திரம் வேண்டும் என்று கூறிய போது, பாகிஸ்தான் பிரச்னை முட்டுக்கட்டையாக இருக்கவே பாகிஸ்தான் பிரிந்தாலொழிய இந்தியாவுக்குச் சுதந்திரம் என்பது குதிரைக் கொம்பு தான் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது இந்தியத் துணைக்கண்டத்து அரசியல் வானிலே!

'பாகிஸ்தான்' பிரிவினையை அதிகாரப்பூர்வமாக ஒப்புக்கொண்டுங்கூட, பாகிஸ்தான் பிரிக்கப்பட்டுங்கூட, பிரிவினைக்கு முன்பு 'ஏக இந்தியா' கூக்குரலிட்டவர்கள், இந்தியாவுக்கு விடுதலை என்று தான் முழங்கினர்களே தவிர, பாகிஸ்தான் இந்தியாவின் உள் அங்கமாயிற்றே! அதுதான் பிரிந்து விட்டதுவே! இன்னும் என்ன இந்தியா என்ற ஏகத்தாளம் கிளப்பினரா அருமைக் கம்யூனிஸ்ட் நண்பர்கள்!

பாகிஸ்தானும் ஹிந்துஸ்தானும் ஒன்ருக இருந்த நேரத்தில், பர்மாவும் இந்தியாவுடன் இணைந்திருந்த நேரத்தில், எல்லாவற்றிற்கும் இந்தியா என்ற பொதுப்பெயர் தான் வழங்கி வந்தது. பர்மா பிரிக்கப்பட்ட பின்பும் இந்தியா என்று தான் எஞ்சிய பகுதி அழைக்கப்பட்டது. எஞ்சிய பகுதியிலும் பாகிஸ்தான் பிரிவினை நடந்தும் கொஞ்சநஞ்சம் மிஞ்சியிருக்கும் பகுதிக்கு இந்தியா என்று தான் பெயரிடப்பட்டிருந்தது-இருக்கிறது என்பதை மதிப்பிற்குரிய கம்யூனிஸ்ட் நண்பர்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

தமிழகம், ஆந்திரம், கேரளம், கன்னடம் என்ற நான்கு நிலப்பரப்புகளும் மொழிவழியில் பிரிந்து இனவழி வழியில் 'அமெரிக்காவின் நாற்பத்திரண்டு' போல, 'திராவிடத்தின் நான்கு என்று கூட்டாச்சி அமைத்துக்

கொள்வதை, தாங்களே சரியாகப் புரிந்துகொள்ளாமல், தப்புப்பிரச்சாரம் செய்வதை நிறுத்தி சிந்திக்கப்பாடுபடுங்கள் என்று தான் கூறுகிறோம், நாட்டின் நலத்திலே நாட்டங் கொண்டதால்!

ஆந்திரா பிரிந்துவிட்டால் என்ன? குடியா முழுகி விடும்? போக்குவரத்து இலாகா, தபால் தந்தி இலாகா முதலிய அத்தியாவசிய இலாகாக்களின் துரித முன்னேற்றத்தை தமிழகத்துடன் இணைந்து கொள்வதால்-ஒப்பந்தம் செய்து கொள்வதால் விரைவில் சாதிக்கலாம் என்ற அரசியல் அறிவு படைத்தோர் ஒருவர்கூட ஆந்திராவில் இல்லை-இருக்கமுடியாது என்பதை யாராலும் அறுதியிட்டு உறுதியாக உரைத்திட முடியாதே!

அதே போலதான் கேரளத்தாரும்! கன்னடத்தாரும் அதுபோலதானே! அண்டை நாடுகளுடன் பகைமை கொண்டாடிப் படையெடுத்து வெற்றி கண்டிடவா எண்ணமிடுவார்கள்?

வணிகத்துறைக்கு மற்றைய மூன்று சகோதர நாடுகளும் அண்டையிலேயிருக்கும் தமிழகத்துடன் ஒப்பந்தத்துக்குத்தானே வரவேண்டும்—வரமுடியும்?

இந்தப் 'பால பாடம்' கூட அறியாதவர்கள் கம்யூனிஸ்ட் தோழர்கள் என்பதைப் பகிரங்க விளம்பரப் படுத்துவதற்கா, 'ஆந்திரா பிரிந்த அன்றே திராவிடநாடு செத்துவிட்டது" என்ற ஒவ்வாத வாதத்தைக் கிளப்ப வேண்டும்?

அமெரிக்காவும், ரஷ்யாவும் ஒப்பந்தம்செய்துகொண்டு ஜெர்மனியின் தாக்குதலை முறியடிக்கவில்லையா, இரண்டாவது உலக மகாயுத்தத்தின்போது? அதை விடவா வட,

தென் துருவங்களாக இயங்கும் ஆந்திர-தமிழகம்? அல்லது கன்னட-கேரளம்?

தமிழன் கிளை மொழிகள் தானே, தெலுங்கு, மலையாளம், கன்னடமெல்லாம். என்னதான் வெவ்வேறு குடிசையிலே இருந்த போதிலும், ரத்த பாசம் அவைகளை இணைக்கும் பாலமாக இயங்குமே?

எனவேதான் கேட்கிறோம், திராவிடம் ஏன் மலராது? மணந்தராது? மகிழ்வு பெருது? என்று!

ஏகோபித்த சக்தியைச் சிதறடிப்பவர்கள் என்ற குற்றச்சாட்டும் நம்மைக் குறுக்கிடாமலில்லை. அதனையும் நாம் ஆராய்ந்து முடிவு கட்ட வேண்டும். இதனை ஆராயப் போகும்போது பலப்பல சிக்கல்கள் தோன்றும்.

எதனை ஏகோபித்த சக்தி என்று குறிப்பிடுகிருர்கள் என்பதைக்கூட தெரிந்துகொள்ள முடியாதவர்கள், ஏகோபித்த சக்தியைச் சிதறடிப்பவர்கள் என்று நமக்குப் பட்டம் சூட்டுகிருர்கள்.

திராவிடம் தனியாகக் கூட்டாச்சி நடத்தும்போது, வடநாட்டுக்கு மேலை நாட்டால் ஆபத்து வருகிறது என்ருல் திராவிடம் துளியும் சகிக்காது. இதனை வெறும் வார்த்தை யலங்காரத்துக்காகவோ, நம்மைப் பற்றியும் பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் எழுதட்டும் என்ற நோக்கத்துக்காகவோ கூறவில்லை!

உதாரணமாகக் குறிப்பிட வேண்டுமென்ருல், ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தெட்டிலே என்று கருதுகிரேம். அதுபோழ்து சென்னையிலே இந்தி எதிர்ப்பு மறியலை திராவிடர் இயக்கம் நடத்திக் கொண்டிருந்தது.

அந்த நேரத்தில், இந்தியத் துணைக்கண்டத்து மத்திய அரசாங்கம், ஹைதராபாத் மேல் நேரடி நடவடிக்கை எடுத்த போது சென்னை அரசாங்கமும், தம்முடைய போலீஸ் படையை அனுப்ப வேண்டிய சூழ்நிலை வந்தது.

சென்னை அரசாங்கம், போலீஸ் படையினைப் பெருவாரியாக ஹைதராபாத்துக்கு அனுப்பிக்கொண்டிருக்கும் போது. இந்தி எதிர்ப்பு மறியலை வேறு தொடர்ந்து நடத்துவதைவிட, ஹைதராபாத்தை வென்று வெற்றி வீரர்களாக சென்னைப் போலீஸார் திரும்பிய பின்பு மீண்டும் மறியலை நடத்திக்கொள்வோம். அதுவரையிலும் தற்காலிகமாக மறியலை—அறப்போரை நிறுத்திக்கொள்வதுதான், சென்னை அரசாங்க நிர்வாகம் சிரமமின்றி நடப்பதற்குரிய வழியைக் காண முடியும் வாய்ப்பு என்று கருதி இந்தி எதிர்ப்பு அறப்போரினைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்த மனித இதயம் படைத்தவர்கள்தான், திராவிடத் தனியரசு நடத்துவர்.

அப்போது, அமெரிக்காவாலோ, ஆங்கிலேயராலோ அல்லது வேறு எவராலோ இந்தியத் துணைக்கண்டத்துக்கு ஆபத்து நேரும் என்று தெரிந்தால், உடனே திராவிடம் உதவி செய்யும்! நெஞ்சுறுதி காட்டும் நேர்மைக்கு! வாரி இறைக்கும் வலிமையை நீதியினை நிலைநாட்ட, குறிப்பிட்ட ஒப்பந்தங்களின்படி இரு நாடும் கையெழுத்திட்டு அடிமைப்பட்டுக் கிடந்தபோது வடநாடு திராவிடத்தை மதித்ததில்லையே! வாழ்க்கைக்கு வசதி காட்டியதில்லையே! எத்தனை ஆண்டுத் திட்டங்கள் வகுத்தாலும், திராவிடத்தைப் புறக்கணித்தனரே! அவர்களுக்கா நாம் நன்மை செய்வது? என்று கொக்கரிக்க மாட்டார்கள் திராவிடர்கள். அதற்கு மாறாக, 'காட்டுமிராண்டிகள்' என்று கூறி

யவர் கண்ணீர் வடிக்க நேர்ந்தாலும், கண்ணீர்த் துளியைத் துடைக்க திராவிடம் தயங்காது!

ஏன் தெரியுமா? இரு பூனைகளுக்கு ஒரு அப்பத்தை பகிர்ந்து கொடுக்க நீதிபதியாகத் தீர்ப்புச் செய்த குரங்கின் கதையைத் தெரிந்தவர்கள் திராவிட மண்ணிலே பிறந்தவர்கள்.

"இன்னு செய்தாரை யொறுத்தலவர் நாண நன்னயஞ் செய்து விடல்" என்ற திருக்குறளினை இதயத்திலே, இதயோரத்திலே பதித்து வைத்திருப்பவர்கள் திராவிடர்கள்.

எனவேதான் ஏகோபித்த சக்தியைச் சிதறிடச் செய்பவர்கள்! என்று நம்மை எள்ளி நகையாடுபவர்களும், பிரிந்தால் தான் நல்வாழ்வு! வாழ்க்கைத் தரத்தில் உயர்வு! என்பவை பற்றிப் பேச விரும்பும் அளவிலிருக்கும் மலரும் திராவிடத்தின் மாண்பு! மதிப்பு!

யாரை யார் விரட்டுவது? என்ற கேள்வி! சந்தேக விளக்கமல்ல அந்தக் கேள்வி! சவால்!

சவாலை ஏற்றுக்கொண்டு பதிலளிக்கிறோம் நாம்! சிந்தனையை அடகு வைக்காமல் செயலாற்றினால் சரி!

யாரை யார் விரட்டுவார்கள்? எதை எது விரட்டும்? இது பாலபாடம்!

அறியாமையை அறிவும், இருளை ஒளியும், மடமை மதியும், விரட்டித்தான் ஆக வேண்டும். நாச சக்திகளை நாசமாக்கி, நல் வாழ்வு வாழலாம் என்ற நோக்கோடு!

நூற்றுக்குப் பதினன்கு பேர் படித்தவர்களாக மதிப்பெடுக்கப்பட்டிருக்கும் இந்த நாட்டிலே, அஞ்ஞானத்தை விஞ்ஞானம் விரட்டித்தான் ஆகவேண்டும்.

ஆண்டுக்கொருமுறை சரஸ்வதி பூஜை நடத்தி, கல்விக்கரசி சரஸ்வதிதான். அவள் உலகைப் படைத்துக் காத்து அழித்துவரும் மும்மூர்த்திகளில் ஒருவரான பிரம்ம தேவனின் சிருஷ்டி-புத்திரிதான் என்று புளுகிக் கொண்டிருக்கும் ஆஸ்திகர்கள், மகளையே தந்தைக்கு மனைவியாக்கி மகிழும் மடத்தனத்தை மதியுலகம் விரட்டித்தானுக வேண்டும்.

நாட்டிலே சூழ்ந்திருக்கும் மாயை இருளை நீக்கி, 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற லட்சியத்துக்காக்கி மகிழ ஒளி புகுந்துதான் ஆகவேண்டும். புகுந்த ஒளி மாயை இருளை விரட்டித்தான் ஆகவேண்டும்.

நாங்களும் தமிழர்கள்தான்! தமிழகமே எங்கள் தாயகம் என்று வம்பு பேசி, வார்த்தையளவிலே தமிழர்களாக நடித்து, செயலிலே தமிழ்ப் பண்பையே அடியோடு கெடுத்து, உலகப் பொதுமறை திருக்குறளையும்விட அதிமேதாவித்தனம் வாய்ந்தது கீதை என்று வாது செய்து, வாழ்க்கையிலும், கலாச்சாரத்திலும் தமிழர் வாழ்க்கை முறையிலிருந்து — கலாச்சார முறையிலிருந்து அதிகத் தூரம் ஓடிவிட்ட— ஓடிவிட்டதோடு மட்டுமின்றி தமிழ் மொழியிலும் வடமொழியை அளவுக்கு மீறிக் கலந்து விரைவிலேயே தமிழைத் தனியாக—இலக்கண இலக்கியத்தோடு இயங்கவிடாமல் தடுத்துவிடவேண்டுமென்ற தற்குறித்தனத்தைத் தலைமேல் தாங்கிக் கொண்டு, நடையுடை பாவனைகளில் தமிழர்களைவிட மாறுபட்டு—வேறுபட்டு—தங்களைத் தனிக் கூறுபோட்டு, சகலதுறைகளிலும்

தமிழர்களைவிட மேம்பட்டவர்களாக ஸ்டண்ட் வேலை நடத்திக் கொண்டிருக்கும் 'தகர டப்பா முறை'களை—பார்ப்பனீயத்தைத் தமிழ்ப் பண்புக்கு விரோதமாக இருக்கும் காரணத்தால், நாட்டின் சொந்தக்காரர்கள் விரட்டித்தானாகவேண்டும்.

இந்தச் சாதாரண விஷயங்கள், ஒரு நாட்டைப் பற்றிச் சிறிது நேரமாவது சிந்தித்துப் பார்க்கும் பண்பு படைத்த எவர்க்கும் எளிதில் விளங்கும். அதை விடுத்து யாரை யார் விரட்டுவது? என்று சவால் முறையிலேயே இனியும் கேள்விகள் இயங்குமானால், மலருகின்ற—மலரவிருக்கின்ற திராவிடத் திருநாட்டில் பார்ப்பனர்கள்—ஆரியர்கள் செல்வச் சிரஞ்சீவிகளாக வாழ முடியாது.

'ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியைத் துரத்தியது' என்று பழமொழிக் கதை பகர்வார்கள், நாட்டிலே!. 'உழுதுவிட்டு வந்தவனை ஒட்டுத் திண்ணையிலிருந்தவன் உதைத்தானாம்' என்று கூறுவார்கள். பூனை இளைத்திருந்தால் எலி, மச்சான்முறை செப்புமாம்' என்று வேதனைக் குரலை வெளிப்படுத்துவார்கள் நாட்டிலே!

இவையெல்லாம் வெறும் பேச்சுக்காகவோ, எதுகை மோனையுடன் உச்சரிப்புக்கு ஏற்ற எழுத்துக்களாக இயங்குவதால் அதனை அடிக்கடி உபயோகித்துக் கொள்ளும் ஆயுதமாகவோ மக்கள் கூறவில்லை.

பழமொழி ஒவ்வொன்றும் பயனுள்ள தத்துவங்களைப் பிரதிபலிக்கிறது. விம்மித் தணியும் வேதனைக் குரலை வெளிப்படுத்திக் காட்டுகிறது, இந்தப் பழமொழிகளையெல்லாம் கூறி வைத்த பரம்பரையினர், ஒண்டவந்த பிடாரிகளை விரட்டாமல் வேறு என்ன செய்வது? காலை

யிலே வயலடைந்து உழைப்பை உரமாக்கி, உதிரத்தை நீராக்கி வயலிலே இறைத்து, உயிரினையே விதைத்து விட்டு, வெறுங்கூடாக வீட்டுக்கு மாலையிலே திரும்பிவந்து கொண்டிருக்கும் உழவனை—அவனுக்குச் சகோதரன் என்ற பெயரைத் தாங்கிக் கொண்ட உலுத்தன் ஒருவன் ஏறி மிதித்து வீட்டுக்குள் வாராதே என்று உறுமினனும். அப்பேர்ப்பட்ட முறையிலே தமிழகத்தின்—திராவிடத்தின் சூழ்நிலையைப் பொறுத்து, கொஞ்சம் கொஞ்சமாக, நாட்டுக்குடையவனின் கூட்டாளிதான்—நாங்களும் தமிழர்கள்தான் என்ற பெயரைத் தாங்கிக் கொண்ட ஆசிரியர்கள், நாட்டுக்குடைய தமிழர்களைக் கல்வித்துறையிலிருந்து ஆட்சித் துறைவரை சகல துறைகளிலும், தாங்களே ஏகபோக ஆதிக்கம் செலுத்துவதோடு நின்றுவிடாமல், தங்களைத் தவிர மற்றவர்கள்—வாழக்கூடாது என்ற மனோநிலையில், தமிழர்களை வஞ்சகமாக—சிரித்துச் சிரித்தே மிட்டாய் கொடுத்துக் குழந்தைகளை ஏமாற்றுவதைப் போல—விரட்டிவிட வேண்டும்—ஒழித்துவிட வேண்டும் என்ற கங்கணத்தை கை, கால், கழுத்திலெல்லாம் கட்டிக்கொண்டு, அற்பத்தனமாக — காட்டுமிராண்டித் தனமாகத் திட்டுவதையே தொழிலாகக் கொண்டு ஆரியர்கள், வதைக்கிறார்கள்—வாழ்வைச் சிதைக்கிறார்கள்-வளத்தைப் புதைக்கிறார்கள்-விஷவித்து விதைக்கிறார்கள் - விபரீதக் கதை கதைக்கிறார்கள்!

இப்பேர்பட்ட கொடும்பாவிகளை - கொலைஞர்களை — கோட்ஸேக்களை விட்டுவைப்பது நலமாகாது. நாடு நாசமாவதற்கு அதுதான் முக்கிய காரணமாகிவிடும். எனவேதான், யாரை யார் விரட்டுவது? என்ற சவால் கேள்விக்கு திராவிடம் - பதில் சொல்கிறது.

நாட்டின் நாச சக்தியை நல்ல இதயங்கள் விரட்டு கின்றன. வயலின் விளைவிலே குறைவைத் தூது கொண்டு வரும் 'களை' யினை நெல் விதைத்தவர்கள் களைந்துவிடுகின் றனர்,

அதுபோலத்தான், கலாச்சாரத்தைக் கெடுக்கும் மாற் றுக் கலாச்சாரக்காரர்களின் 'ஈயத்தை'—பார்ப்பனர்களை யல்ல, பார்ப்பனியத்தை—ஆரியரை அல்ல—ஆரியத்தை விரட்டவேண்டும். அதுதான் நடக்கவிருக்கிறது!

நாங்கள் தமிழ் பேசவில்லையா? எங்களைத் தமிழர்க ளாக, சேர்த்துக்கொள்ள மாட்டீர்களா? என்று பார்ப் பனர்கள் கேட்கிறார்களே, அவர்களை நாம் அழைத்துக் கொண்டால் என்ன? தமிழினத்தில் சேர்த்துக்கொண் டால் என்ன? என்று ஒரு சிலர் கேட்கலாம்.

தமிழ்க்களத்திலே குதிக்கட்டும் பார்ப்பனர்கள். தமிழச்சியைப் போல இயங்கட்டும் பார்ப்பன பாவையர். அம்மாமிகள் முறை ஒழிந்து அக்கா தங்கையென உலவட் டும். குறுக்கு நூலால் குவலயத்தையே ஏமாற்ற எண்ணிக் கொண்டிருக்கும் விசால வஞ்சக புத்திகளோ, ஐக்கிய கபட எண்ணங்களோ இல்லாதவாறு வெட்டியெறிந்து உண்மையான தமிழ்ப் பற்றுதலுடன் தமிழனாகவே இயங் கட்டும். தமிழ்க் கலாச்சாரத்துக்கு அரணாக உண்மையி லேயே உழைக்கட்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, **தமிழர்கள்தான்!** என்ற உணர்ச்சி உதிக்கட்டும் அவர்களுக்கு?

உதிக்குமா? உதிக்காது! உதிப்பதாயிருந்தால் யாரை யார் விரட்டுவது? என்று உளறிக்கொட்டியிருக்காதுகள். ஆரியர் திராவிடர் என்னும் அறிவீனம் என்று தங்களது தற்குறித்தனத்தைத் தாங்களே தம்பட்டமடித்துவிட்

டிருக்காதுகள். தமிழ்மொழி மாநாட்டில் பங்கேற்று, தமிழின் உயர்வுக்காகப் பாடுபட்டிருக்குங்கள்.

ஆனல், இவற்றையெல்லாம் செய்யவில்லே. வீண் கூச்சல் போடுகின்றன. யாரையார் விரட்டுவது? என்று மிரட்டிப் பார்க்கின்றன.

துருக்கியிலே கமால்பாட்சா, எதை யாரை விரட்டி ஞன்? சீனத்திலே ஸன்யாட்ஸென் எதை, யாரை விரட்டி ஞன்? அமெரிக்காவிலே ஆபிரஹாம் லிங்கன் எதை, யாரை விரட்டிஞன்? ருஷ்யாவிலே லெனின் எதை, யாரை விரட்னுன்? ஜெர்மனியிலே ஹிட்லர் எதை, யாரை விரட்டிஞன்? இந்தியத் துணைக் கண்டத்திலே காந்தி எதை யாரை விரட்டிஞர்? சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்து, நிலேயினைப் படம் பிடித்துவைத்திருக்கும் அறிவியக்கவாதி களிடம் ஆப்பை அசைத்த குரங்குபோல, சவால் விட்டுக் கொண்டிருப்பது அறிவுடைமையல்ல என்பதை எல்லோரும் அறிவார்கள்.

நினைவிருக்க வேண்டும், நிகழ்ந்த நிகழ்ச்சிகள் எப் பொழுது, ஏன் நிகழ்ந்தன? நிகழ வேண்டிய சூழ்நிலே என்ன? என்பதுபற்றி அறிந்திருக்க வேண்டும், சவால்விடு பவர்கள்! அதுபற்றி ஆராய்ந்து அறியும் திறமிருந்தால், யாரை யார் விரட்டுவது? என்று காலம் போன காலத்தில் மாரடித்து ஒப்பாரி வைத்திருப்பார்களா ?

பழங்கால இலக்கியங்களிலிருந்து ஆதாரங்கள் காட்டு கின்றனவாம் அந்த அபத்தங்கள்! ஆரியர் திராவிடர் என்ற வேறு பாடோ—வேற்றுமையுணர்ச்சியோ அந்தக் காலத்தில் கிடையாதாம். உளறிக்கொட்டுகின்றனர் இவ் வாறு கீழ்ப்பாக்கம், குறுக்கு நூலார்கள்!

சங்க காலத்தில் கூட வடநாட்டிலிருந்த ஆரியர்களுக்கும், தமிழகத்திலிருந்தவர்களுக்கும் இடையரு த போர் இருந்ததென்பதற்குச் சான்றுகள் பலவுள்ளன.

மக்கள் மன்றம் விளக்கமாக அறிந்திருக்கிறது—அறிவித்திருக்கிறது இதனை! கேளாக்காதினருக்கும்— பார்வை தெரியாமல் பதறிப்போயிருக்கும் கலர்க் கண்ணுடிகளுக்கும்—ஒத்துப்பாடி ஜால்ரா தட்டிக்கொண்டிருக்கும் பத்தாம் பசலிகளுக்கும் அது விளங்க வில்லையென்றால், வரலாறு பொய்யென்று ஆகிவிடுமா?

அழுத்தந்திருத்தமாக அதனைக் காணிக்கையாக்குகிறோம், அறிந்துகொள்ளட்டும் உளறிக்கொட்டும் உருவங்கள், என்ற கருத்தோடு!

வட நாட்டின் மீது தமிழ் மன்னர்கள் பகைமை பாராட்டி படையெடுத்துச் சென்றதற்குப் பல வரலாறுகள் இருக்கின்றன. இமயவரம்பின் நெடுஞ்சேரலாதன் என்ற மன்னன் இமயமலைவரை சென்றுன் என்பதும், கரிகால்வளவன் வடநாட்டின் மீது படையெடுத்து அவந்தி மன்னன், மகத மன்னன் முதலியவர்களை வென்று இமயம் வரை சென்று திரும்பினுன் என்பதும், செங்குட்டுவன் ஆரிய அரசர்களை வென்று அவர்கள் தலைமீது கல்லேற்றி வந்தானென்பதும், திரண்டுவந்த ஆரியப்படைகளைத் தாக்கி வெற்றி பெற்றமையால் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் என ஒரு பாண்டிய மன்னன் இருந்தானென்பதும் தெரிகிறது.

இன்னும் வடநாட்டிலிருந்த ஆரியர்களுக்கும், தமிழகத்தினருக்கும், நெடுகப் பகைமையிருந்தமையை புறநானூறும், சங்க நூல்களும் நன்கு விளக்குகின்றன.

சங்க கால இலக்கியங்களிலிருந்து ஆதாரங்கள் காட்டிய கீழ்ப்பாக்கங்களுக்கு, நாமும் அதே சங்க கால இலக்கியங்களால் விளக்குகிறோம். எது அறிவீனம்! என்பதை மக்கள் உணரட்டும்!

'வடவாரியர் படை கடந்து'

'பேரிசைமரபின் ஆரியர் வணங்கி'

இவ்வாறு பதிற்றுப்பத்தில் இரண்டாவது பத்தில் காணலாம். இதற்கு கீழ்ப்பாக்கங்கள் எந்த அறிவீனத்தை எடுத்துக்காட்டவிருக்கின்றன?

இத்துடன் நாம் நிறுத்திவிட விரும்பவில்லை அகநானூற்றிலிருந்தும் புள்ளி விபரங் கூறத்தயங்கவில்லை என்பதை நிலைநாட்டுகிறோம். பிறகாவது ஆரியர் திராவிடர் என்னும் அறிவீனம் என்று புத்தியைப் பறிகொடுத்து விட்டு, புலம்பித்திரிகின்ற புல்லர் கூட்டம் உண்மையை உணரட்டும்.

உணர்ந்தபின் அந்த உலுத்தர் கூட்டம், ஊர்ஊராகச் சென்று ஆரிய திராவிட வேற்றுமை அக்காலத்திலும் இருந்தது என்று அறிவிக்கப் பிரச்சாரம் புரியா விட்டாலுங் கூட, திமிராக, 'அறிவீனம்' என்று திட்டுவதை விட்டொழிக்க வேண்டும். ஆரியர் கலாச்சாரம் தென்னாட்டுக் கலாச்சாரத்தினும் முரண்பட்டதாக — வேறுபட்டதாக இருக்கிறது என்பதைப் பகிரங்கமாக ஒப்புக் கொள்ளாவிடினும் பரவாயில்லை தத்தம் உள்ளங்களுக்காவது உரைத்துக் கொள்ளட்டும். எனவே தான் அகநானூற்றிலிருந்து ஒரு ஆதாரத்தைக் காட்டுகிறோம் தெளிவில்லாத நெஞ்சங்கள் தெளியுமென்ற நம்பிக்கையோடு!

"ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசை
தென்றுமுதிர் வடவரை வணங்குவிற்பொறித்து
வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்"

இவ்வாறு குறிக்கப்பட்டிருக்கின்றது அகநானூற்றில் வடவாரியர்களுக்கும் தமிழர்களுக்கும் நடந்த சண்டைகள்! இன்னும் ஆரியப்படைகள் தமிழகத்துக்குள் நுழைந்தால், தமிழர்கள் எதிர்த்துப்போராடியிருக்கின்றனர் என்பது,

"ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்" எனவும்,
"மாரி யம்பின் மழைத்தோற் சோழர்
வில்லீண்டு குறும்பின் வல்லத்துள் புறமிளை
ஆரியர் படையின் உடைக"

எனவும் பாடப்பட்டுள்ள அடிகளால், முள்ளூர், வல்லம் என்ற இடங்களில் தமிழகத்துக்குள் நுழைந்த ஆரியப் படைகளைத் தமிழ் அரசர்கள் எதிர்த்து ஓடச்செய்தனர் என்று தெரியவருகிறது.

இவைகளிலிருந்து எளிதாக விளங்கிக்கொள்ளலாம், சங்க காலத்திலும் ஆரியருக்கும் தமிழருக்கும், வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் பகைமையுணர்ச்சி இருந்ததென்பதை!

இனியும், இதனை விளங்கிக்கொள்ளாமல் விபரீதபுரிக்குப்பயணமாகிறோம் என்று அவர்கள் கூறினால் நாம் தடுக்கப்போவதில்லை! என்றாலும் இன்னும் தருகிறோம்.

திராவிடர்கள் என்றால், வடமொழிச் சார்பார்புடையவர்கள் 'ஓடுபவர்கள்' என்றும், சிவஞானமுனிவர் அவர்கள்

'ஓட்டுபவர்கள்' என்றும் பொருள் விளக்கியிருக்கின்றனர். இவற்றுள் நாங்கள் எதனைக்கைக்கொள்வோம்?

ஓட்டுபவர்கள் என்றால் மாசை—அசுத்தத்தை—அறியாமையை—இருளை ஓட்டுகிறவர்கள்—மனதுக்கண் உள்ள மாசை ஓட்டுபவர்கள் என்றுதான் பொருள் கொள்ளல் வேண்டும். ஏனெனில், 'மனத்துக்கண் மாசிலனாதல் ஆனைத்திறன், என்ற அறத்தின் வழி நடந்தவர்களே திராவிடர்கள்.

திராவிடம் என்ற சொல் பிராமி மொழியிலும் இருக்கிறது. பிராமி மன்னன் நிக்கலஸ் ஆட்சிச்சரித்திரத்தில் திராவிடர்களைப்பற்றிய குறிப்பு காணப்படுகிறது. ஸ்மிருதியிலும் 'பஞ்சத்திராவிடம்' என்று குறிக்கப்பட்டிருக்கிறது.

மலையாளம், தமிழகம், ஆந்திரம், கன்னடம் அவற்றுடன் மராத்தி ஆகிய ஐந்து திராவிடங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. மலையாள தேசத்தில் பிறந்து, வளர்ந்து வடமொழி கற்று சவுந்தர்யலகரி என்ற சமஸ்கிருத நூல் எழுதிய சங்கராச்சாரியாரும் அப்புத்தகத்தில் திராவிடர்களைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார். எல்லையப்பர் எனப்படுவோரின் மொழிபெயர்ப்பு மூலம் எல்லோரும் இதனை எளிதில் அறியலாம்.

சுமார் அறுபது ஆண்டுகட்க்கு முன் தமிழ் நாட்டில் வாழ்ந்த சபாபதி நாவலர் என்ற தமிழ் வாணரால் எழுதப்பட்ட 'திராவிடப் பிரகாசிகா' என்ற நூலிலும் திராவிடம் என்னும் வார்த்தைக்குப் பல ஆதாரங்கள் காட்டப்பட்டிருக்கின்றன.

இன்றைக்கு இந்நாட்டின் தேசியப்பாட்டாகப் பாடப்பட்டு வரும் 'ஜனகணமன...' பாடலிலும் 'நோபல் பரிசு' பெற்ற கவிஞர் ரவீந்திரநாததாகூர் 'திராவிட உட்கல வங்கா' என்ற வரியில் திராவிடத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருப்பதைக்காணலாம்!

இவ்வளவும் போதாது என்று குறிப்பிடும், குறைமதியினர்க்கு, ஆரியர்-திராவிடர் பற்றி வரலாற்றுப் பேராசிரியர்களில் பலர், அரும்பெரும் ஆராய்ச்சிகளை— பலப்பல வழங்கியிருக்கின்றனர். விளக்கியிருக்கின்றனர். அவற்றில் சிலவற்றை மட்டும் காணிக்கை யாக்க விரும்புகிறோம் மன்றம் மகிழ!

கவனமாகக் கேட்கவேண்டும் கேளாக்காதினர், கருத்தோடு நோக்கவேண்டும் கருப்புக்கண்ணாடியினர்.

1. மறைமலையடிகள்—வேளாளர் நாகரிகம்.
2. பி. டி. சீனிவாசஅய்யங்கார்— இந்திய சரித்திரம் முதற்பாகம்.
3. ரிக்வேதம்— ஆதிகாரங்கள் 1, 10.
4. டி. ஸி. ஆலன்—இந்திய சரித்திரம்.
5. சுவாமி விவேகானந்தர்—சொற்பொழிவுகளும் கட்டுரைகளும்: இராமாயணம்.
6. பி. சிதம்பரம் பிள்ளை—'திராவிடரும் ஆரியரும்'.
7. ராகோஸின்—வேதகால இந்தியா.
8. ரமேஷ்சந்தர்டட்—பண்டைய இந்தியாவின் நாகரிக வரலாறு.
9, ரமேஷ்சந்தர்டட்—புராதன இந்தியா..

10. ஸர்.வில்லியம் வில்ஸன் ஹண்டா—இந்திய மக்களின் சரித்திரம்.
11. டாக்டர் ராமேஷ்சந்தரமஜூம்தார் —பூர்வீக இந்திய சரித்திரமும், நாகரிகமும்.
12. புலவர் டி. பொன்னம்பலம் பிள்ளை— மலபார் க்வார்டர்லி ரெவ்யூ.
13. ஹோஷிசந்தர்டட்—இந்தியா அன்றும் இன்றும்.
14. ப.வே.மாணிக்கவேலு நாய்க்கர்— சென்னை மிருகக் காட்சிசாலையில் நமக்குள்...
15. ஏ. ஸி. தாஸ்—ரிக்வேத காலத்து இந்தியா [முதற் பாகம்]
16. வின்ஸென்ட் ஏ, ஸ்மித்— ஆக்ஸ்போர்ட் இந்திய சரித்திரம்.
17. கேம்பிரிட்ஜ்—பழைய இந்தியாவின் சரித்திரம்.
18. இம்பீரியல் இந்தியன் கெஜட்டியர் [முதற் பாகம்]
19. ராதாகுமுத்முகர்ஜி—இந்து நாகரீகம்.
20. ஸர். ஜேம்ஸ்மர்ரே—புதிய இங்கிலீஷ் அகராதி.
21. ஸர். பண்டார்கரின் கட்டுரைகள். (மூன்றும்பாகம்)
22. கிருஷ்ணசாமி அய்யங்கார்—தென்இந்தியாவும் இந்தியக்கலையும்.
23. ஸர். ஜார்ஜ்டன்பார்—இந்திய சரித்திரம்.
24. ஹென்றி. ஸ்மித்வில்லியம்ஸ்— சரித்திரக்காரரின் உலக சரித்திரம்.
25. ஸி. எஸ். சீனிவாச்சாரியார்—இந்து இந்தியா.
26. ஹெச். ஜீ. வெல்ஸ்— உலகத்தின் சிறு மனுதர்ம சாஸ்திரம். [சரித்திரம்]

27. சி. ஜே. வார்க்கி—இந்தியச் சரித்திரப்பாகுபாடு.
28. இ. பி. ஹாவெல்— இந்தியாவில் ஆரியர் அரசாட்சியின் சரித்திரம்.
29. நாகேந்திரநாத்கோஷ்—இந்திய ஆசிரியரின் இலக்கியமும் கலையும்.
30 ஹென்றி பெவரிட்ஜ்—விரிவான இந்தியா சரித்திரம் [முதற்பாகம்]
31. கே. என். சிவராஜபிள்ளை—பண்டைத் தமிழர்கள் வரலாறு.
32. ஜி. ஹெச். ராலின்ஸன்—இந்தியா.
33. பால்மாஸின் அவர்ஸெல் — புராதன இந்தியாவும் இந்தியாவின் நாகரிகமும்.
34. ஸர். ஹாரிஜான்ஸ்டன்—இந்தியாவில் அன்னியர்கள்.
35. கால்டுவெல்—திராவிடக்குழு ஒப்பியன் மொழி.
36. ஜி. ஏ. கிரையர்ஸன்—இந்தியாவில் மொழி ஆராய்ச்சி.
37. ஏ. மில்லர்-கோகள் — திராவிட ஆராய்ச்சிகள்.
38. டிக்ஸன்—இந்தியாவின் இன வரலாறு.
39. ஞா. தேவநேயப்பாவாணர்—ஒப்பியன் மொழிநூல்.
40. ந. சி. கந்தையா பிள்ளை—திராவிடர்.
41. ரிஸ்லி—இந்தியாவில் இனங்கள்.
42. மூன்றும் நான்காம் வகுப்புச்சரித்திரங்கள்.

போதுமா? திராவிடர்-ஆரியர் என்பது தவறான வாதமென மொழிவோரும், ஆரியர் திராவிடர் என்னும் அறி

வீனம் என்று அறைகூவுவோரும் சங்க கால இலக்கியங்களில் சான்று கிடையாதெனச் செப்படி வித்தை புரிவோரும், யாரை யார் விரட்டுவது என்று வாய்ச்சவடால்அடித்துத் திரியும் சொந்த மதியிலிகளிடம், உண்மையிலேயே ஆரியதிராவிடப் பிரச்னை பற்றிப் பரிசீலித்துக்கொண்டிருக்கும் பரிசுத்த இதயம் படைத்தோரும், பட்டியலைக் காணட்டும் என்ற நோக்கோடுதான் பட்டியல் தயாரித்துப் பார்வைக்கு அனுப்பிவைத்தோம். மீண்டும் பளிச்செனத் தெரியுமளவுக்குப் படம் பிடித்துக்காட்டுகிறோம்.

எனவே, திராவிடம் என்று ஒரு பகுதி இருந்து வருவதென்பது பற்றியோ, அல்லது அதன் எல்லையைக்குறிப்பிடுவது பற்றியோ, அரசியலறிவு பெற்று நேர்மையின் நிலைக்கண்ணாடியாக இயங்கும் யாரும் சர்ச்சைக்கு வர முடியாது.

ஆகவே, இந்நாடு பிரியவேண்டுமா என்பது பற்றித்தான் சகல தகராறுகளும் ஏற்பட்டிருக்கின்றன. அதனையும் அரசியலறிவு படைத்த நேர்மையாளர்கள் நேரு சர்க்காரின் ஆட்சிகுறையுடன் ஒப்பிட்டு சிந்தித்துத் தீர ஆலோசித்து முடிவு கட்டினால்—அவர்கள் கூறும் தீர்ப்பு ''மலரும் திராவிடம்!'

எனவே, திராவிடஸ்தான் பிரச்னை எப்பொழுதும் பயனளிக்கப்போவதில்லை. வெறும் காட்டுக்கூச்சல், பகற்கனவு என்றெல்லாம் ஏளனம் பேசுவதற்கு இடமில்லை என்று உறுதியாக நம்புகிறோம்—தெரிவிக்கிறோம்.

இந்த நேரத்தில் தான் உண்மையான சந்தேகங்கொண்டவர்கள் கிளம்புகின்றனர். உள்ளபடியே அவர்

களது நேர்மையான சந்தேகங்களுக்கு விடையளிக்கவேண்டியது நாட்டின் நலத்தின்மேல் நாட்டம்கொண்டவரது கடமை.

"இந்தியாவிலேயே, இணைந்து ஏன் இருக்கக்கூடாது? தனியாகப் பிரிந்து செல்வதால் நமக்கு எத்தகைய பலன் கிட்டிவிடப்போகிறது? ஐக்கியமாக இருந்தால், நம்மை எந்த எதிரியானாலும் முறியடிக்க முடியாதே! துண்டு துண்டாகச் சிதறிப்போவதால் எதிரிகள் நம்மை எளிதில் வீழ்த்திவிடுவார்களே! என்றெல்லாம் தங்களது உள்ளங்களைத்திறந்து வைக்கிறார்கள்!

திராவிடத்தை விட எவ்வளவோ சிறிய நாடான காஷ்மீரத்தை முதல் நாள் பாகிஸ்தானும், இரண்டாம் நாள் இந்தியத் துணைக்கண்டமும், மூன்றாம் நாள் ரஷ்யாவும், நான்காம் நாள் அமெரிக்காவும், ஐந்தாம் நாள் ஆஸ்திரேலியாவுமாக கைப்பற்றிக்கொண்டிருக்கிறது.ஒரு நாடு பரிபூரண நடுநிலைமையில் இயங்குவதோ, பாட்டாளி மக்களின் கையிலே மிளிர்வதோ,பறிகொடுப்பதோ அந்த நாட்டின் ஆட்சியாளர்களைப் பொறுத்தது. அதற்குச் சிறுவிளக்கம் தர ஆசைப்படுகிறோம்.

சியாங்-கே-ஷேக்கின் சீனா இந்தியத்துணைக்கண்டத்தைவிடச் சிறியதுவா? மாற்றார்கூடப் படையெடுத்துத் தம் ஆதிக்கத்தில் இணைத்துக்கொள்ளவில்லை சொந்த நாட்டு மக்களே, அவ்வளவு பெரிய சீனத்தையும் கைப்பற்றினர்.சியாங்-கே-ஷேக் தோல்வியுற்றதோடு மட்டுமில்லை பாதுகாப்புக்காக 'பார்மோஸா'வைத்தேர்ந்தெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் நேரிட்டுவிட்டது.

சீனம் மிகப்பெரிய நாடு. அதிக ஜனத்தொகை உள்ள நாடு.பணக்கார அமெரிக்காவின் காதலியாக வாழ்ந்தநாடு.

கேட்ட நேரத்தில் கேட்ட வசதிகளைத் தன்னகத்தேஇழுத்துக்கொள்ளும் சக்தியினை அமெரிக்கா அளித்திருந்த ஒரே பெரிய கீழ்நாடு.

ராணுவ பலமோ மிகமிக அதிகமாக இருந்தது, சியாங் கே-ஷேக்குக்கு! இந்த லட்சணத்தில் அமெரிக்காவின் போர்த்தளவாடங்கள் உதவி என்ற காரணத்தைக் காட்டி இறக்கப்பட்டன சீனத்துக்குள்! வெளியார் உதவியென்றால், அது ஆளும் கட்சிக்குத்தான்! சிறு தகராறு என்றாலும், தீர்த்து வைக்க ஐக்கிய நாட்டு சபை இருந்தது.

இவ்வளவும் இருந்தது சியாங்-கே-ஷேக்குக்கு! என்றாலும், இன்று சியாங்-கே-ஷேக் எங்கே! இதனைப்பொது மக்கள் நன்றாக பரிசீலிக்க வேண்டும். பரிசீலித்து பின்னர் பராபரமே நாமொன்றுமறியோம் என்று வாளாவிருந்து பயனில்லை, உள்ளத்தைப்பக்குவப் படுத்தவேண்டும்.

அவ்வளவு பெரிய நாடு—அவ்வளவு ராணுவபலம் ஏன் பயன்படவில்லை? இதனைத்தான், சந்தேகங்கொண்டவர்கள். நெஞ்சில் நிறுத்தவேண்டும்!

ஆளுவோரின் மனோநிலை, ஆளப்படுவோருக்குப் பாதகம் விளைவித்த காரணத்தைத்தவிர வேறுஎந்தக்காரணத்தைக் காட்டமுடியும்?

இதிலிருந்து பெரிய நாடாக இருந்தால் தான் எதிரிகளின் எதிர்ப்பை சமாளிக்க முடியும் என்று கூறுவது பைத்தியக்காரத்தனம் என்று முடிவு கட்டத்தோன்றுகிறதல்லவா?

சீனத்தைவிட எத்தனையோ மடங்கு சிறிய நாடு ஜப்பான். இரண்டாவது உலக மகாயுத்தத்தின்போது ஜப்பான் இயங்கிய விதம் யாது!

சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் ஒன்றுதான் என்று களிப்புக்கேணியில் குளியலாடிக்கொண்டிருந்த சர்ச்சிலை எவ்வளவு தூரம் வேதனைகுட்படுத்தியது!

யுத்தத்தில் மட்டுமல்ல! மற்ற விஷயங்களை எடுத்துக் கொண்டாலுங்கூட, எந்த விஷயத்தில் தான் ஜப்பான் சளைத்திருந்தது?

யுத்தகாலத்துக்கு முன்பே அமெரிக்கத் தேவதையின் தயாரிப்பான யு. எஸ். ஏ. பவுண்டன்பேனா பதினான்கு அணுவுக்கு விற்பனையாகிக் கொண்டிருந்தபோதுங்கூட இரண்டரையணுவுக்கு பவுண்டன்பேனாவை மார்க்கெட்டில் கொண்டுவந்து குவித்தனரே ஜப்பானியர்!

இவ்வளவுக்கும் நிரந்தரமாக வாழ வசதியற்ற சிறு தீவு ஜப்பான். அமெரிக்காவின் அளவைவிட எத்தனையோ மடங்கு சிறியநாடு ஜப்பான். அதன் சாதனைகள் அகில உலகையும் ஆச்சர்யக்கடலில் ஆழ்த்தியதே! ஜப்பானை விடவா நாம்கோரும் திராவிடம் சிறியது? ஜப்பானை விடவா நாம் கோரும் திராவிடத்தில் இயற்கையின் கொந்தளிப்பு சேதத்தால் நாசமடைந்துவிடும்? ஜப்பானில் இருப்பது போலவா அக்கினிக்குழம்புகளைக் கொட்டும் எரிமலைகள் நம் நாட்டில் இருக்கின்றன?

வீடுகட்ட முடியாத நிலையா? விளையாத வயலா? பின் ஏன் நாம் தனித்து வாழ முடியாது?

நாம் அடுத்தவரை வம்புச் சண்டைக்கு இழுக்காவிட்டாலும் வந்த சண்டையை விடாத பரம்பரையினர். வீண் சண்டையில் மாற்றார் இறங்கினல்,— நாம் தனியாக இயங்கும்போது—உலக நிலை என்ன ஆகும்?

அமெரிக்காவும் ரஷியாவும், வெவ்வேறு இருதுருவங்களாக இருந்தும் யுத்தத்தின் போது, ஒன்று சேர்ந்து இயங்கவில்லையா? எதிரியை முறியடிக்கவில்லையா? அதை விடவா மோசமாகி விடுவோம், நாம் கூட்டு சேர்வதிலே!

'உலகம்வாழ உழைப்பான் திராவிடன்' என்ற உயரிய நெறியினைப் பாழ்படுத்தி விடமாட்டார்கள் திராவிடத்தைப் பிரிக்கச் சொல்லுபவர்கள்.

ராணுவப் பாதுகாப்பா? இந்துஸ்தான் 'இம்முறையிலே இயங்கினல்,' என்ற ஒப்பந்தத்துடன் திராவிடம் இணைந்து பணியாற்ற முடியாதா? தெளிவடையாத நெஞ்சங்கள் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

பாதுகாப்பு என்றபோது மட்டும், இந்தியத் துணைக் கண்டத்துடன் இணைந்து கொள்வதும், மற்றப்படி துண்டுபட்டு நின்று கொள்வதும் அறிவுடைமையாகுமா என்று சிலர் கேட்கலாம்.

ஒன்றியிருக்கும்போது, புறக்கணிக்கப் பட்டிருக்கும் திராவிடம், தனித்திருக்கும்போது நல்வாழ்வுவாழ முடியும் என்ற உண்மையைத் திராவிட இயக்கத்தினர் தெரிந்து கொண்டு விட்டனர்.

வளமாக வாழ்ந்த இனம் ஒடுக்கப்பட்டு வாழ்விழந்து துன்பச் சுழலில் துடிதுடித்துக் கொண்டிருக்கும் நிலையை மாற்றித்தாகை வேண்டும். அப்படி மாற்றி யமைக்

கும்போது, ஆட்சி முறையையே அடியோடு மாற்றியாக வேண்டும்.

திராவிடத்திலிருந்து வரிப்பணத்தை வசூலித்து வசூலித்து மத்திய அமைச்சரவைக்கு அனுப்பி வைத்து விட்டு உள் நாட்டின் அத்தியாவசியத் தேவைகளுக்குக் கூட, மத்திய அரசாங்கத்தையே எதிர்பார்த்து ஏங்கிக் கிடப்பதும்—மத்திய அரசாங்கம் எளிதில் கையை விரிப்பதும்—கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி, கடன் வாங்கியும் பட்டினி என்ற முறையில் திராவிடம் ஏங்கி மாளவும் வாடிக்கை வாழ்க்கையாகிப்போன காரணத்தால், அடக்கப்பட்ட மக்களின் உள்ளத்தில் அனல் கிளம்புகிறது. அதுதான், சுதந்திர ஜ்வாலே! விடுதலே கீதம்! பிரிவினே முரசு! நம்மை நாமே—எந்த ஒரு சமஷ்டி சர்க்காருக்கும் கட்டுப்படாமல் வாழ்ந்து வரும் நிலேயிலிருந்தால் இருக்குமா இந்தப் பேதம் என்ற இன முழக்கம்! உரிமைப் போர்!

அதன் எதிரொலிதான் 'திராவிடநாடு திராவிடர்க்கே' என்ற உரிமைக் குரல்—அதனே உரக்கக் கிளப்பிடும் இயக்கம்—அதற்கு மக்கள் மன்றத்திலே கிடைக்கும் மதிப்பு — அது வளரும் மாண்பு—அதனேக் காக்கும் பண்பு—பண்பு படைத்த உறுதி — உறுதியின் வெற்றியிலே உழைப்பு—உழைப்பின் வெற்றி விடுதலே—விடுதலேயின் முழுப்பொருள் இன்பம்!

எனவே தான் 'திராவிட நாடு' பிரிவினே பற்றிய உணர்ச்சி, தேக்கியும்வழிந்தோடும் அளவில் பெருகிவிட்ட ஆர்வத்துளிகள் தோன்றுகின்றன.

அந்த ஆர்வமும், பிரிவினே உணர்ச்சியும், திராவிடத்தை அதி விரைவில் பிரித்திட வழிவகை செய்கின்றன

அதற்காகத்தான் பாடுபட்டு வருகிறது, திராவிட முன்னேற்றக் கழகம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு விசால ஆந்திரம் என்றால் என்ன என்றும், ஐக்கியத் தமிழகம் என்றால் யாது என்றும், அதே போல ஐக்கிய கேரளம், ஐக்கிய கன்னடம் என்றால் அதன் வரலாறு, வளம் எப்படியுள்ளது என்றும் தெரியாமலில்லை.

இந்த நான்கு நாடுகளும் ஒற்றுமையாக கூட்டாக ஒரு சர்க்கார் நியமித்துக் கொண்டால், ஒன்றுக்கொன்று எளிதாக, போக்குவரத்து, வியாபாரம், பரிவர்த்தனை, பாதுகாப்பு முதலிய பலப்பல துறைகளில் உதவிக்கொள்ளலாம் என்ற பரந்த நோக்கம்தான் 'திராவிடநாடு திராவிடர்க்கே' என்ற தாரக மந்திரம்!

இனி, தமிழ், ஆந்திரா, மலையாள, கன்னட மக்களைப் பற்றி, நாட்டைப் பற்றி ஒரு சிறிது ஆராய்வோம்!

1941-ம் ஆண்டுக் கணக்குப்படி, அதனை அப்படியே தருகிறோம், மக்கள் பார்வைக்கு!

புதிய தமிழகத்தை ஏற்படுத்துகையில், சென்னை மாநிலத்தைச் சேர்ந்த தமிழ் மாவட்டங்கள், சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ்ப் பகுதிகள், திருவிதாங்கூர் தமிழ்ப் பகுதிகள், பிரெஞ்சு ஆதிக்கத்துக்குட்பட்ட தமிழ்ப் பகுதிகள் ஒரே நாடாக இணைக்கப்படவேண்டும்.

அதே போல, சென்னை மாநிலத்தைச் சேர்ந்த ஆந்திர மாவட்டங்கள், சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆந்திரப் பகுதிகள், ஒரிஸாவிலுள்ள கஞ்சம் மாவட்டம், ஹைதராபாத்திலுள்ள தெலிங்கானு, பங்கனபள்ளி, சாந்தூர்

சமஸ்தானங்கள், முதலியவற்றை இணைத்து விசாலஆந்திர மாகவும், சென்னை மாநிலத்தைச் சேர்ந்த கன்னடப் பிர தேசம், பம்பாய் கன்னட மாவட்டங்கள், மைசூர், ஹைத ராபாத் கன்னடப் பகுதி, குடகு, டெக்கான் சமஸ்தானங் கள் ஆகியவற்றை இணைத்து ஐக்கிய கன்னடமாகவும், தமிழ்ப் பகுதி நீங்கிய கேரளப் பகுதி, மலபார் மாவட் டம், பிரெஞ்சு ஆதிக்கத்திலுள்ள மாஹி, லட்சத் தீவுகள் இன்ன பிறவற்றை இணைத்து ஒரே கேரளமாகவும் அமைக்கப்பட்டாக வேண்டும்.

இந்த முறையானது, மொழிவழி மாநிலப் பிரிவினை என்பதாகும். மத்திய அமைச்சரவை கூறுவது போல, சிற்சில அதிகாரங்களையும், வருமான இலாகாக்களையும், மத்திய அமைச்சரவையில் ஒப்படைத்துவிட்டு, பிரதேச பாஷையில் மட்டும் உள்நாட்டு நிர்வாகத்தை நடத்திச் செல்வதற்குப் பயன் படுத்தப் பார்க்கின்றனர்.

| பிரதேசங்கள் | நிலப்பரப்பு | மக்கள்தொகை |
|---|---|---|
| சென்னை மாநிலத்தமிழ் மாவட்டங்கள் | 50491 | 25542913 |
| சித்தூர் மாவட்டத்தமிழ் பகுதி | 4213 | 1132000 |
| திருவிதாங்கூர் தமிழ் பகுதி | 2000 | 1200000 |
| பிரெஞ்சுத்தமிழகம் | 166 | 265208 |
| தமிழ்நாடு | 56870 | 28140121 |
| சென்னை மாநில ஆந்திர மாவட்டங்கள் | 76503 | 23159714 |
| சித்தூர்மாவட்ட ஆந்திரப் பகுதிகள் | 1688 | 500395 |
| ஒரிஸாவிலுள்ள கஞ்சம் | 7688 | 1412600 |
| தெலிங்கானு | 41086 | 8566200 |
| பங்கனபள்ளி, சாந்தூர் | 417 | 60406 |
| ஆந்திரா | 127382 | 33699315 |

| பிரதேசங்கள் | நிலப்பரப்பு | மக்கள் தொகை |
|---|---|---|
| சென்னை மாநில கன்னடப் பகுதி | 9759 | 2574751 |
| பம்பாய் கன்னட மாவட்டங்கள் | 18768 | 3843583 |
| மைசூர் ... ... ... | 29458 | 7329000 |
| ஹைதராபாத் கன்னடப் பகுதி | 7000 | 1200000 |
| குடகு ... ... ... | 1593 | 163000 |
| டெக்கான் ... ... | 5530 | 1466910 |
| கன்னடம் | 72108 | 16477244 |
| கேரள யூனியன் ... | 7100 | 7300000 |
| மலபார் மாவட்டம் ... | 5795 | 4229425 |
| மாஹி ... ... ... | 25 | 20000 |
| லட்சத்தீவுகள் ... | 13 | 4082 |
| கேரளம் | 12933 | 11553507 |

மேலே குறிப்பிட்டிருப்பது, ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தோராம் ஆண்டு அறிவித்த கணக்குப் படியுள்ளது! இதிலே சிற்சில மாற்றங்கள் நேரலாம். ஆனால் அது, பிரமாதமான—மகத்தான மாறுதலையடைந்து விடமுடியாது. ஏறத்தாழ சொற்ப மாறுதலையடையக் கூடிய எல்லைகளை, அப்போதைக்கப்போது சம்பந்தப்படும் நாடுகளுடன், பேச்சு வார்த்தைகளின் மூலம் அவற்றை நிவர்த்திக்கலாம்.

இந்த நான்கு நாடுகளும், மொழிவழியில் பிரிந்தாலும் இனவழியில் பிரிய முடியாது. ஏன் தெரியுமா?

தமிழினிலே பிறந்த கிளைமொழிகள். ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள். அவர்களுக்குள் கிளம்பும் பூசல்

அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் தோன்றும் அபிப்பிராய மாக இருக்காது—இருக்க முடியாது, பங்காளிச் சண்டை யாகத்தானிருக்கும். அது தீராப் பகையல்ல! ஒன்று சேர வேண்டியவை.

உதாரணமாக, திருமணம் என்றவுடனே எப்படி மணமக்கள் நினைவுக்கு வருகிறார்களோ, எழுத்தாளன் என்றவுடனே எப்படி எழுத்துக்கள் காட்சியளிக்கின் றனவோ, தேன் என்றவுடன் எப்படி இனிப்புத் தோன்று கிறதுவோ அப்படியேதான், தமிழன் என்றவுடன் தெலுங் கன் என்றும் தமிழன் என்றவுடன் மலையாளி என்றும் தமிழன் என்றவுடன் கன்னடன் என்றும் எண்ணத்தார கைகள் இதய வானிலே உதிக்கின்றன, தாமாகவே!

இதனைத்தான் அண்ணா கூறும் பொழுது, நடைமுறை யிலே பேசுவது போல, தமிழர்க்கும் மற்றவர்க்கும் உள்ள உறவு நிலையிதனை, மிகவும் கிண்டலாக—ஆனாலும் கருத்து டன் கூறியிருக்கிறார். அஃது நமக்குத் தேவைப்படுமா கையால், அதனை அப்படியே தருகிறோம், சிரிக்க வல்ல— சிந்திக்க.

"தமிழர்—வங்காளியர்; தமிழர் பஞ்சாபியர்; தமிழர்– சீனர்; என்ற முறையிலே சொல்லிப்பாருங்கள்! வருமா? வராது! சொல்ல வராது, சுலபமாக, தொடர்பாக! முடிய வும் முடியாது!"

தமிழர்—தெலுங்கர்; சொல்லுங்கள்! சுலபமாக வரும். தொடர்ச்சியாகவும் வரும்!

தமிழர்—யவனர்; தமிழர்—ஜாவாத் தீவினர்; வராது!

ஆந்திரவாடா—அரவவாடா! உடனே வரும், சுலபமாக, தொடர்ச்சியாக, சேர்ந்து!

சொல்லிப்பாருங்கள், ஆந்திரவாடா—அஸ்தினபுரவாடா! முடியுமா? முடிகிறதா? இல்லையே!

ஏன்? முடியவில்லை! தொடர்பற்ற காரணத்தால்! வேறு வேறு இனம் என்ற வழக்கத்தால்!

தமிழர்—தெலுங்கர்; தமிழர்—மலையாளி; தமிழர்—கன்னடர் முதலியன சேர்ந்து வருகின்றன சுலபமாக! ஏன்? என்ன காரணம் இதற்கு?

சேர்ந்து, தொடர்பாக, சுலபமாகச் சொல்லவருகிறது-முடிகிறது, தமிழர்—தெலுங்கர்; தமிழர்—மலையாளி என்ற முறையில், ஏன்?

தமிழரும் தெலுங்கரும், தமிழரும் மலையாளிகளும், தமிழரும் கன்னடரும், தமிழரும் துளுவரும், ஒரே இனம், ஒரே இன மக்கள், ஒருவர்க்கொருவர், ஒத்த ஒரேமாதிரியான, தொடர்பு கொண்ட வாழ்க்கை நடத்துபவர்கள் என்ற காரணத்தால்!

தமிழரும் தெலுங்கரும், கன்னடரும் மலையாளிகளும், துளுவும் ஒரே இனத்தின் தனித்தனிக் கூறுகள்! வேறு வேறான முரண்பட்ட பிரிவல்ல, இனமுமல்ல! ஒரே இனம் பல கூறுகளாக! இதனை நன்கு உணரவேண்டும் நாம்!

இதிலே முன்னுக்குப்பின் முரண்பாடு கிடையாது! சீற்றமுறவோ அன்றிச் சலிப்புதான் அடைந்திடவோ காரணமுமில்லை! இதைவிட்டு ஒருவர்க்கொருவர் மோதிக் கொள்ளவோ மாறுபட்டக் கருத்துக்களை வழங்கிக்கொள்

ளவோ வேண்டிய அவசியமுமில்லை—அதிலே அர்த்தமும் கிடையாது!

ஆந்திரரும், தமிழரும், கன்னடத்தாரும், மலையாளிகளும் சுயாட்சி, மொழிவாரி மாகாணத்தை விரும்புகின்றனர்! தன்னாட்சியைத் தழுவத்துடிக்கின்றனர்!

நிச்சயமாகத் தேவை, இவை, இம்மொழிவழி அமையும் மாகாணங்கள். அதிலே ஒரு மாறுதல்—ஒரு அடிப்படை மாறுதல்! ஒரு கூட்டணி! கூட்டாட்சி, திராவிட நாடு!

ஆந்திர ஆட்சிக்கு அட்டியில்லை! தமிழாட்சிக்குத் தடங்கலில்லை! மலையாள ஆட்சிக்கு மாச்சரியமில்லை! கன்னட ஆட்சிக்குக் கண்டனமுமில்லை! இவையெல்லாம் சேர்ந்த கூட்டணி—கூட்டரசு—கூட்டாட்சி, திராவிட நாடு என்ற உணர்ச்சியைப் பெறவேண்டும்"

அப்போதுதான், இன்பத்திராவிடம் மலரும்!

மலரும் திராவிடத்திலே, கோழைத்தனம் கொய்யப்படும். கோழைத்தனம் மட்டுமல்ல—கோழைத்தனத்தை வளர்த்துவந்த மதமூடநம்பிக்கைகள் மாய்க்கப்படும். ஏன்? என்ற கேள்விக்கு அவசியமில்லையென்றாலும், வரலாற்றைப் புரட்டி ஆதாரப் பதில் அளிக்கவே விரும்புகிறோம்.

தஞ்சாவூர்! தமிழ் வளங்கொழித்திருந்த தரணி. அதன் அரசர் ராயர் என்ற வகுப்பைச் சேர்ந்தவர். அவருக்கு வாய்த்த மந்திரியோமுற்றுமுணர்ந்த முழு வேதியர்! அரசரே கோவிலிலே கொலுவீற்றிருக்கிறார்.

அதே சமயத்தில்தான் தஞ்சாவூர் அரண்மனையை நோக்கி, மராட்டியர் படையெடுத்து வருகின்றனர். அரசர்

கேட்கிருர், "மந்திரி! ஏதோ சத்தம் கேட்கிறதே! என்ன அது? குதிரைகளின் குளம்படிச் சத்தம்போலக் கேட்டுக் கொண்டிருக்கிறதே! என் மனம், மகேஸ்வரன் பூஜையில் கூட நாடவில்லையே!" என்று.

அமைச்சரும், "எதிரியின் படை வரும் திக்கிலிருந்து சத்தம் கேட்கிறது!" என்கிருர்! "நம் நாட்டை நோக்கியா படையெடுத்து வருகின்றனர்? யாருடைய படை அது?" என்று அரசர் அலறுகிருர்.

"அரசே! அஞ்சற்க! வருவது மராட்டியப்படை! நான் பல ஆட்களைக்கொண்டு கோட்டை வாயலில் துளசிச் செடிகளைக் கொட்டி வைத்திருக்கிறேன்! அதைத் தாண்டி மராட்டியப்படை வராது! மீறிவந்தால் அவர்களுக்கு ரௌரவாதி நரகந்தான்! அவர்கள் இந்துக்கள். எனவே அவ்விதம் வரமாட்டார்கள்!" என்று அபயம் அளிக்கிருர் அமைச்சர்.

மராட்டியக் குதிரைப்படை துளசிச் செடிகளைப் பசும் புல் என்ற எண்ணத்துடன் வாயில் கௌவிக்கடித்துத் தின்று கொண்டே கோட்டைக்குள் புகுந்துவிட்டன! தஞ்சாவூர் மராட்டியப் படையின் பிடிபட்ட கோட்டையாகிவிட்டது.

இந்தக் கோழைத்தனம் மதத்தின் பெயரால் கற்பித்த காரணத்தால் தானே, அரசன், 'ஆண்டவன் சித்தம்' என்று எதிரியை முறியடிக்க எண்ணுமல் வாளாவிருந்திருக்கிருன்!

எதிரியின் படையை, எதிர்த்து போரிடுபவனல்லவா அரசன்! அவ்வாறின்றி எதிரிகள், நாம் தூவியிருக்கும்

துளசிச் செடிகளைத் தாண்டி உள்ளே நுழைந்துவிட்டால் ரௌரவாதி நரகந்தான் கிடைக்கும் என்று எதிரியைத் தாக்காமல் நின்றுவிட்டால்—மகேஸ்வரன் பூஜையிலேயே மனத்தைச் செலுத்திவிட்டால் மாற்றாரின் அரசாகிவிடுமே! இதைக்கூட மறைத்து மோக்ஷ நரகவாதம் புரியும் வேதியர்களின் வார்த்தைக்குக் கட்டுப்பட நேர்ந்துவிட்ட கோழைத்தனம் மதத்தின் அடிப்படையிலே எழுப்பப்பட்ட காரணத்துக்காகத்தான், கோழைத்தனத்துடன் மத மூட நம்பிக்கைகளும் சேர்த்துக் கொளுத்தப்படும் என்று கூறுகிறோம்.

மலரும் திராவிடத்திலே, ஜாதி, மத பேதங்கள் களையப்படும்! நாடார் வீட்டுப் பையனுக்கு நாடார் வீட்டிலிருந்து பெண் கொடுக்கக் கூடாது. நாயுடு வீட்டுப் பெண்ணுக்கு நாயுடு வீட்டிலிருந்து மணமகனைத் தேர்ந்தெடுக்கக் கூடாது! அஃதே போல பிள்ளை, முதலி, ரெட்டி, செட்டி, கௌடர் என்னும் பேதம் மறைய, ஒரே ஜாதிக்குள் பெண்ணைக்கொடுக்கவோ எடுக்கவோ கூடாது.

பெயருக்குப் பின்னால் ஜாதிப் பெயர் எழுதினால், மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை. ராஜகோபாலன் என்றுதான் நிறுத்திக்கொள்ள வேண்டும். அதற்குப் பிறகும் ஆச்சாரியார் என்றோ, அய்யங்கார் என்றோ, அய்யர் என்றோ குறிப்பிட்டிருந்தால் மூன்று மாதக் கடுங்காவல்!

இவ்வாறெல்லாம் சட்டம் செய்துவிட்டால், நாட்டிலே ஜாதி இருக்குமா? நான் உயர்ந்த ஜாதி, நீ கீழ் ஜாதி என்று பேதம் பிரித்துக் காட்டிக்கொண்டிருக்க முடியுமா?

மலரும் திராவிடத்திலே, பெண்களுக்குச் சொத்துரிமை, மறுமணம், மண ரத்து உரிமை போன்ற ஜீவாதாரப் பிரச்சினைகள் தீர்த்துவைக்கப்படும்; பெண்களுக்குச் சமநிலை வழங்கப்படும் எல்லாத் துறையிலும்! அதற்காக ஆடவர்கள் அடுப்பங்கரைப் பாடம் படிக்க நேருமா, என்று ஐயப்படவேண்டிய அவசியமில்லாதவாறு, வீட்டுக்கரசி பெண், விளங்கும் நாட்டுக்கு அவள் ஒரு கண்! இவ்வாறு அமைக்கப்படும் பெண்கள் பங்கு!

ஐந்து வகுப்பு முடிக்கும் வரை, மாணவர்கள் கண்டிப்பாக எந்தத் தொழிலும் செய்யக்கூடாது என்ற நிலை மலரும் திராவிடத்திலே வகுக்கப்பட்டிருக்கும். இந்த ஜாதிக்காரன், இந்தத் தொழில்தான் பார்க்க வேண்டியிருக்கும் என்ற கட்டாய வெறித் திட்டம் பகுத்தறிவுச் சம்மட்டியால் சுக்கு நூறுக்கப்பட்டிருக்கும்.

மாணவர்களுக்கு, மாசு துடைக்கப்படும் கல்விச்சாலைகளும், மாணவர்களுக்கு, மகிழ்ச்சியை அள்ளி வழங்கும் பூஞ்சோலைகளும், மழை காலத்திலும் சகதியைக் காணமுடியாத சாலைகளும், சாலை நெடுகிலும் சரித்திரம் படிக்கும் போது நினைவுக்கு வருகிறதே மரங்கள், அவை நிற்கும், அசையாத பாதுகாப்போடு!

வெய்யிலுக்கு நிழலாக—வழிப்போக்கர்களுக்குப் பசியடக்கும் அமுதாக—மழை பெய்யக் காரணமாக நிற்கும் மரங்களாக அவை நிற்கும்!

திராவிடத் திருநாட்டில், ஆந்திரா, கன்னடம், கேரளம், தமிழகம் உட்பட எல்லாப் பகுதிகளுக்கும் சிறந்த போக்குவரவு சாதனமாக அமைந்திருக்கும் இருப்புப்

பாதை, தி கிரேட் டிரவிடியன் ரெயில்வே ( The Great Dravidian Railway ) என அழைக்கப்படும்.

விளையும் பருத்தியை பம்பாய்க்கும், ஆமதாபாத்துக்கும் அனுப்பிவிட்டு, ஆடைகளுக்கு 'வடக்கொடுகோணம் தலைசெய்யும்' தாசானு தாசன் வேலைகள், விடுதலை பெற்ற வளமார் திராவிடத்திலே இருக்காது.

உணவுப் பொருள்களைப் பெருக்கும் திட்டங்களுக்காக, மாகாண சர்க்கார் மத்திய சர்க்காரைக் கடன் கேட்டது—கிடைக்கவில்லை! என்ற சோக கீதம் திராவிடத்திலே பாடப்படாது!

உணவுப் பஞ்சம் ஏற்பட்டதைக் காட்டி, உதவ வேண்டுமெனக் கெஞ்சிக் கேட்டது சென்னை அரசாங்கம். ஆனால் பலன் பூஜ்யம் என்ற வேதனைக் குரல் விடுதலை பெற்ற திராவிடத்தின் நெஞ்சிலிருந்து விம்மாது!

வகுப்புவாரி பிரதிநிதித்வம் நீடிக்க வேண்டும் என, சென்னை அரசாங்கம் இந்திய அரசாங்கத்துக்குப் பன்முறை தெரிவித்திருந்தும், "அது கூடாது. ரத்து செய்க" என்று டில்லி அரசாங்கம் சென்னை அரசாங்கத்துக்குக் கட்டளை பிறப்பித்திருக்கிறது, என்ற அகங்காரப் பதில், மலரும் திராவிடத்திலே மலர முடியாது!

அரிசிப் பஞ்சம் தாங்காமல் சென்னை அரசாங்கம் அரிசி வேண்டுமென டில்லி சர்க்காரை வேண்டியது. டில்லி சர்க்கார் ஐக்கிய மாகாணத்தில் அரிசி நிறைய இருப்பதால், அங்கிருந்து அனுப்பிவைக்குமாறு, ஐக்கிய மாகாண சர்க்காருக்குக் கட்டளையிட்டது. கட்டளையின்

படி சென்னை அரசாங்கத்துக்கு ஐக்கிய மாகாணத்தி லிருந்து அரிசி வந்தது.

வந்த அரிசியோ, படுமோசமானது மட்டுமல்ல! விலை யும் இங்கு விற்பதைவிடப் பல மடங்கு அதிகம். இதன் காரணமாகச் சென்னை அரசாங்கத்தின் நிதிக் களஞ்சியத் திலிருந்து ஒரு கோடி ரூபாய், ஐக்கிய மாகாண சர்க்கா ருக்குப் போய்விட்டது.

பணமில்லை, பணமில்லை என்று திண்டாடும் திரா விடத்திலிருந்து ஒரு கோடி ரூபாயை வாங்கி, டில்லி சர்க் கார், இந்தியத் துணைக் கண்டத்தின் இன்னொரு மாகாண மான ஐக்கிய மாகாணத்துக்குத் தானம் செய்திருக்கிறது— தாரைவார்த்துக் கொடுத்திருக்கிறது என்றெல்லாம் குமுறி யிருந்த உள்ளங்கள் குதூகலமடையும் மலரும் திராவிடத் திலே!

சர்க்கரை நெருக்கடி காலத்தில், எவ்வளவுக்கெவ் வளவு கொள்ளையடிக்க முடியுமோ அவ்வளவுக் கவ்வளவு நேரு பிறந்த வடநாட்டு ஐக்கிய மாகாணம் கொள்ளை யடித்த கொடுமையைத் தடுக்காமல் டில்லி சர்க்காரும் நீண்ட நாள் காலத்தவணை கொடுத்துக்கொண்டு வந்தது என்ற உரிமையின்மைக் குரல் ஒலிக்காது மலரும் திரா விடத்திலே!

பொன்னொளி வீசிப் புத்துயிர் பெற்றிருந்த திரா விடத்திலே செந்தமிழ்ப் பண்ணொலி இல்லாமல் இந்தியின் மந்தக் குரல் ஒலிக்கிறதே என்ற ஓலம் உலவ முடியாது, மலருகின்ற திராவிடத்திலே!

புதிய இந்தியத் துணைக் கண்டத்து அரசியல் மூலம், மாகாணங்களுடைய அதிகாரங்கள் டெல்லியில் கொண்டு

போய்க் குவிக்கப்பட்டிருப்பது ஒவ்வொரு மாகாணத்தி லும் உள்ளவர்களை ஆத்திரமயமாக ஆக்கியிருக்கிறது. மாகாணத்துக்குக் கிடைக்கக்கூடிய வருமான இனங்கள், மத்திய சர்க்காருக்குக் கொண்டுபோகப்பட்டிருக்கின்றன. குடியரசின் தலைவராக வருபவர், நினைத்த போது, மகா ணங்களின் நிர்வாக அதிகாரத்தில் தலையிடும் அளவுக்கு மாகாணத்தின் சுதந்திரம் பறிபோயிருக்கிறது என்ற இழி நிலை ஏற்பட முடியாது மலரும் திராவிடத்திலே!

எனவேதான், மலரும் திராவிடம் மக்கள் மன்றத் தின் ஒத்துழைப்பால்—உறுதுணையால் மலர்ந்த திராவிடம் என்ற இலட்சிய வெற்றியை எங்கும் ஒலிக்கச் செய்யும் என்பதில் ஐயமின்றி இருக்கிறோம்.

ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தேழாம் ஆண்டு மே திங்கள் இருபத்தொன்றும் நாள் பாட்னுவில் நடந்த தமது வழிபாட்டுக் கூட்டத்தில் காந்தியார் ஒரு சொற் பொழிவு நடத்தியது இன்னும் நம் மனத்திரையிலிருந்து மறையவில்லை.

"காங்கிரஸ் பதவியேற்ற நாள் முதற்கொண்டு, அது கடந்த அறுபது ஆண்டு காலமாக அரிது முயன்று ஈட்டிய பெருமை, தியாக உணர்ச்சி, பொது நலத்தொண்டு, ஆகிய வற்றை இழந்து வருகிறதாகப் பல வட்டாரங்களிலிருந்து தகவல் கிட்டிவருகிறதென கூறப்படுகிறேன். தன்னல மிக்க அதிகார ஆசைகொண்ட பதவிவேட்டைக்காரரின் ஸ்தாபனமாக அதி வேகத்தில் மாறி வருகிறது காங்கிரஸ். பொது மக்களின் ஊழியர்களாக இருப்பதற்குப் பதி லாக காங்கிரஸார் அவர்களின் தலைவராக, எஜ மானர்களாக மாறிவிட்டனர். சில்லரை சூழ்ச்சி வேலை களாலும், கோஷ்டி பிரிவுகளாலும் காங்கிரஸ் சின்னு

பின்னம் ஆக்கிவிடப்பட்டிருக்கிறது. இது எல்லா மாகாணத்துக்குமே பொருந்தும். இவை தொடர்ந்து நிலை பெறுமேயானால், விரைவில் வந்துகொண்டிருக்கும் விலை மதிப்பில்லா சுதந்திரத்தைப் பாதுகாத்துக்கொள்ள இந்தியரால் இயலாது. அறிவுத் திண்மையும், உள்ளத் தூய்மையும் அதற்குப் பெரிதும் வேண்டும்.

காங்கிரஸும், லீக்கும் இத்தன்மைகளைப் பெருவிட்டால், எல்லா அதிகாரங்களும் அவர்கள் கையைவிட்டு நழுவிப் போவதை உணர நேரிடும். பிரிட்டிஷாரைப் போல் துப்பாக்கி முனையின் உதவியால் அதிகாரத்தைக் காப்பாற்ற முடியாது. இந்த ஸ்தாபனங்கள் பெற்றுள்ள அதிகாரமெல்லாம் மக்களிடமிருந்து பெறப்பட்டது. இப்பொழுது ஒரு சமயம் இவ்வுண்மையை மக்கள் அறிந்து கொள்ளும் திறமையைப் பெருமலிருக்கலாம். காங்கிரஸ் பல ஆண்டுகளின் ஊழியத்தின் பயனுகவும் தியாகத்தின் பலனுகவும், மக்களின் நம்பிக்கையைப் பெற்றிருக்கிறது. இப்பொழுது இது, மக்களைக் காட்டிக்கொடுத்துவிட்டால், ஆட்சி அதிகாரம் குண்டர்கள் கையில் இறுதியாகப் போய்ச் சேரும் என்று அஞ்சுகிறேன்''

மேற்கண்ட பொன் மொழிகளை உகுத்திருந்தார் உலக உத்தமர் காந்தியார். நேர்மையை மதிப்பவர்களாக இருந்தால், காந்தியாரின் கருத்துக்கு மதிப்பளித்து காங்கிரஸ் கட்சியின் கண்ணியத்தைக் காப்பாற்ற அனைவரும் பாடுபட்டிருக்கவேண்டும்.

ஆனல் .....!

செய்யவில்லை அவ்வாறு! சிரழித்துவிட்டனர், சுயநலப் புலிகள்! அத்தகைய சிரழிப்புக்குத்தான் ஆயிரத்துத்

தொளாயிரத்து ஐம்பத்திரண்டாம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில், தென்னாட்டைப் பொறுத்தவரையில் தோல்வியடைந்து விட்டது காங்கிரஸ்.

ஆந்திராவிலே, கேரளத்திலே, தமிழகத்திலே காங்கிரஸ் மைனாரிட்டியாகிவிட்டது, மக்களை மதிக்காமல் துப்பாக்கித் துரைத்தனம் தலைவிரித்தாடிய கோரத்தாண்டவத்தால்!

என்ற போதிலும், அந்தச் சொற்பொழிவில் அவர் கடைசியாகக் குறிப்பிட்டருந்த, 'இப்பொழுது அது மக்களைக் காட்டிக் கொடுத்துவிட்டால், ஆட்சி அதிகாரம் குண்டர்கள் கையில் இறுதியாகப் போய்ச் சேரும் என்று அஞ்சுகிறேன்' என்று கண்ணீர் வடித்த காட்சியினை, உணர்ந்திருக்கும் காரணத்தால், திராவிட இயக்கத்தினர், குண்டர்கள் கையில் நாடு சிக்கிவிடாமல் பாதுகாப்பதற்குச் சீறி எழுந்துவிட்டனர்!

காங்கிரஸ் தென்னாட்டில் செல்லாக் காசு. திராவிட இயக்கம் செல்வாக்குக் கட்சி!

கழகம் உயர்ந்தது, காங்கிரஸ் தாழ்ந்தது என்றால், கழகம் நாட்டின் நற்பணியாளராக உழைப்பதும், காங்கிரஸ் பதவிவேட்டைக்காரர்கள் பலரின் இருப்பிடமாக இயங்குவதும்தான் காரணம்.

பதவி வேட்டைக்காரர்களின் கூடாரத்திலிருந்து திராவிடத்தை விடுவித்து, 'மலர்ந்த திராவிடம், மகிழ்ந்த திராவிடம்' என்ற பண் இசைக்க, மக்கள் ஆனந்தக் கேணியில் ஆட்டம் போட்டுக் குதிக்க, இன்ப வெள்ளத்தில் எதிர் நீச்சலாட கோலாகலமாக இருக்கும்படி அந்த

விழாவினை ஆக்கி, நலமெல்லாம் தேக்கி, நலிவெல்லாம் போக்கி நம்மையெல்லாம் ஊக்கிடும் ஆக்க வேலையில் தான் திராவிட இயக்கம் — திராவிட முன்னேற்றக் கழகம் இறங்கியிருக்கிறது!

நேருவின் காலத்திலேயே திராவிடம் கண்ணியமாக பிரிக்கப்பட்டே தீரும். இல்லையென்றால், உயிரை மதிக்காமல் உரிமைக்குப் போராடும் உத்தமர்கள் நேருவின் காலத்துக்குப் பிறகும் பிரிக்கப்படாமலிருந்தால், உரிமைக் கிளர்ச்சி நடத்தியே தீரும். அதன் காரணமாக திராவிடம் மலர்ந்தே தீரும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் — அறிஞர்க்கறிஞர் அண்ணா அவர்கள் நாட்டு மக்களுக்கு நன்னம்பிக்கையை ஊட்டிவிட்டார்!

எந்த அடிப்படையிலாவது, நம் காலத்திலேயே, நிச்சயமாகக் கூறுகிறோம் மலர்ந்தே தீரும் திராவிடம்!

காந்தியாரின் கண்ணீரைத் துடைக்க, குண்டர்கள் கையில் நாட்டினைச்சிக்கிச் சீரழிய விடாமல் பாதுகாத்தே தீரும். அந்த பாதுகாப்புத்தான் திராவிட விடுதலை!

அந்த நல்லதொரு முயற்சி—விடுதலைப் போராட்டம் விரைவில் நடந்தே தீரும் என்பதற்கு எடுத்துக்காட்டு தான் திராவிடத்திலே காங்கிரஸ் தேய்ந்து வருகிறது என்ற செய்தி!

மலரும் திராவிடம் என்ற மகிழ்ச்சிப் பண்பாடிக் கொண்டிருக்கும் நாம், "அரசியலமைப்பைத் திருத்துவதற்கு என்ன முறையை அனுஷ்டிக்க வேண்டுமென்பது அரசியலமைப்பிலேயே கூறப்பட்டுள்ளது. அரசியலமைப்

யைத் திருத்தும் எந்தப் பிரேரணையும் பிரதிநிதி சபையிலும், செனேட் சபையிலும், மூன்றில் இரண்டு பங்கு மெம்பர்கள், மெஜாரிட்டி ஆதரவைப் பெற வேண்டும். அந்த மெஜாரிட்டியுடன் திருத்தம் நிறைவேற்றப்பட்ட பிறகு, அந்தத் திருத்தம் மாகாண சட்ட சபைகளுக்கு அனுப்பப்பட வேண்டும். நாற்பத்தெட்டு மாகாணங்களில் 36 மாகாணங்கள் அந்த திருத்தத்தை ஆதரித்தால் தான் அரசியல் அமைப்பு திருத்தப்படும்" என்ற அமெரிக்காவின் அரசியல் நிர்ணயத்தை அறிந்தவர்கள்.

"அரசியலமைப்பின் சில ஷரத்துக்களை திருத்துவதாயின், நாட்டின் பார்லிமெண்டில் இரண்டு சபைகளும் ஒப்புக்கொண்ட பிறகு இரண்டு சபைகளும், ஒன்றாகக்கூடி மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டி ஆதரவுடன் அதை நிறைவேற்ற வேண்டும்" என்ற தென்னாப்பிரிக்காவின் அரசியலமைப்பை அறிந்தவர்கள் நாம்!

"மத்திய சர்க்காரின் இரண்டு சட்ட சபைகளிலும் அரசியலமைப்பு பற்றிய திருத்தத்தை நிறை வேற்றிய பிறகு, அது ஒவ்வொரு மாகாணத்திலும் பொது ஜன வோட்டுக்கு விடப்படும். தேசம் முழுவதிலுமுள்ள வோட்டர்களின் மெஜாரிட்டி ஆதரவும், பெரும்பான்மையான மாகாணங்களில் உள்ள வோட்டர்களின் மெஜாரிட்டி ஆதரவும் வேண்டும். உதாரணமாக, ஆஸ்திரேலியாவில் உள்ள ஆறு மாகாணங்களில் வோட்டெடுப்பதில் மொத்தத்தில் மெஜாரிட்டி கிடைத்தால் மட்டும் போதாது. மாகாணவாரியாகக் கவனித்து நான்கு மாகாணங்களின் மெஜாரிட்டி இருக்கிறதா என்று பார்க்க வேண்டும்" என்ற ஆஸ்திரேலியாவின் அரசியல் அமைப்பை அறிந்தவர்கள் நாம்!

"சாதாரண சட்டத்துக்குக்கூட முப்பதாயிரம் பேர் கோரினல், சர்வஜன வோட்டெடுக்க வேண்டும் என்ற நிபந்தனை யிருப்பதால், அரசியலமைப்பு சட்டத்தைத் திருத்துவதற்கென்று தனி ஏற்பாடில்லை" என்று அறிவிக்கும் ஸ்விட்ஜர்லாந்தின் அரசியலை அறிந்தவர்கள் நாம்!

''அரசியலமைப்பைத் திருத்துவதென்ருல், பார்லிமெண்டின் இரண்டு சபைகளும், ஒரே கூட்டமாகக்கூட வேண்டும். சபையில் ஆஜரான மெம்பர்களின் மெஜாரிட்டி மட்டும் போதாது. மொத்த மெம்பர்களின் மெஜாரிட்டி மெம்பர்களது ஆதரவு இருந்தால் தான், அரசியலமைப்பைத் திருத்த முடியும்.

ஆனுல், எந்தத் திருத்தமும் பிரான்ஸில், முடியாட்சியை ஏற்படுத்துவதாக இருக்கக்கூடாது என்று ஒரு ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது பிரான்ஸ் சதா காலமும் குடியரசாகத்தான் இருக்க வேண்டும் என்று பெருமைப் பட்டுக்கொண்டிருக்கும் பிரான்ஸின் அரசியல் நிலையினை அறிந்தவர்கள் நாம்!

எனவேதான் ஆந்திரா, கேரளம், கன்னடம், தமிழகம் ஆகிய நான்கு மொழி இணைப்பில் இயங்கும் திராவிடக் குடியரசுக் கூட்டாட்சியின் புதிய அரசியலையோ—அதற்குரிய திருத்தங்களேயோ, நம் நாட்டைப் பொறுத்து-நாட்டின் நிலையை—நலனைக் கவனித்து நாமே தயாரித்துக் கொள்ள முடியும்!

அரசாங்கத்துக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆலோசனைகள் சொல்லிவரும்.

மத சம்பந்தமான ஊழல்களை— மடாதிபதிகளின் லீலைகளை—பகவான்களின் படலங்களை மக்கள் மன்றத்தில் நிறுத்தி வைக்கும், திராவிட முன்னேற்றக் கழகம்!

தொழில் துறையில் பேதம்—தாழ்வு கற்பிக்கும் துரோக மதியினரை மக்கள் மன்றத்தில் நிறுத்தும்!

ஏழை பணக்காரன் என்ற பேதத்தை, முதலாளி தொழிலாளி பிரச்னையை, வறுமை வளமையை, ஜாதிமதப் பிளவை—பிரிவை, ஏற்றத் தாழ்வை, மூட நம்பிக்கைகளை பகுத்தறிவைப் பாழ்படுத்தி, படைத்த கடவுளுக்கே குடும்பக் கதைகள் எழுதி வைத்து ஆண்டவனுக்குக் கொள்ளி வைத்துக்கொண்டிருக்கும் அடியார் கூட்டத்தின் ஆபாசப் புராணங்களை, மோசடிகளை, அரசியல் செப்படி வித்தைகளை, லஞ்சத்தில் லயிப்பவர்களை, வஞ்சத்தில் வாழ்பவர்களை, மஞ்சத்தில் திமிரைத் துணை கொண்டு உறங்குபவர்களை, துரோகிகளை மக்கள் மன்றத்திலே நிறுத்தி, நாட்டிலே நிலையினை விளக்கி, வாக்கெடுப்பு நடத்தி வெற்றி மாலையைத் திராவிடத்துக்கு அளித்தே தீரும் திராவிட முன்னேற்றக்கழகம் என்ற நம்பிக்கை அரும்பு எல்லோரது மனச் செடியிலும் அரும்பியிருக்கிறது! அந்த அளவுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டிலே செய்த தொண்டு மூலம் நாட்டு மக்களிடையே நம்பிக்கையைப் பெற்றிருக்கிறது!

எனவே தான், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூலம் நிச்சயம் மலரும் திராவிடம் என்று உறுதி கூறும் நாட்டு மக்கள் சார்பில் நாமும் கூறுகிறோம், நாவிலே நாட்டிலே நடமாட விட்டு!

முடிவாக...........

சென்னை மாநிலத்தில் தஞ்சை திருச்சி புயலின்போது, மாற்றுக்கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக்கழகம், புயல் நிவாரணத்துக்கு உதவியளித்ததுகுறித்துஎவ்வாறு சென்னை அரசாங்கத்தாரால் பாராட்டப்பட்டு விளங்கியதோ,—ஆபத்து நேரத்தில் நேசக்கரம் நீட்டி ஆபத்தை முறியடித்ததோ அவ்வாறே, திராவிடம் பிரிந்துவிட்டாலுங்கூட, மீதி இந்தியாவுக்கு வேற்று நாட்டுக்காரரால் ஆபத்து உண்டாக்கப்படுகிறது என்பது தெரிந்தால், மீதி இந்தியா திகைத்து நின்றால், திராவிடம் நிச்சயமாகக் கை கொடுத்து, மீதி இந்தியாவைப் பாதுகாக்கும், ஒப்பந்தங்களின்படி! மீதி இந்தியாவால் பாராட்டப்படும்!

அதற்கு எடுத்துக்காட்டாக, தஞ்சை திருச்சி புயல் நிவாரணத்துக்கு, திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்த நிதிக்குழு, இருபத்தேழாயிரம் ரூபாய்க்குமேல் நிதி திரட்டி, கைத்தறித் துணி நெசவாளர்களின் கண்ணீரைத் துடைப்பதற்காக, அந்த ரூபாய்க்கு கைத்தறித் துணிகளையே வாங்கி, சென்னை அரசாங்கத்தைக் கூப்பிட்டுக் கொடுத்த காட்சியும், பெற்றுக்கொண்ட அரசாங்கத்தார், நன்றி தெரிவித்து, எழுதியிருக்கும் கடிதத்தையும் மக்கள் பார்வைக்கு வைக்கிறோம், மலரவிருக்கும் திராவிடத்தில்! எந்த நாட்டாருடனும் சகஜமான முறையிலே பழகி, அகில உலகிலிருந்தும் 'பாராட்டு' பெறும் அளவுக்கு இயங்கும் என்பதை எடுத்துக்காட்டுவதற்காக! இதோ சென்னை அரசாங்கம் அளித்துள்ள நன்றிக்கடிதம், காட்சிக்கு வந்திருக்கிறது. அப்படியே தருகிறோம், அனைவரும் அறிந்துகொள்ளுவதற்காக!

## GOVERNMENT OF MADRAS,

REVENUE DEPARTMENT.

Letter No. 98570-F-52—8, dated 28th August 1953.

From

Sri. T. J. Jacques, I. A. S.,
Deputy Secretary to Government.

To

The Assistant Secretary,
Dravidian Progressive Federation,
Rayapuram, Madras.

Sir,

Sub: Cyclone-(Tanjore and Tiruchirappalli) - Gift clothes - contribution from the Dravidian Progressive Federation, Madras.

Ref: Your letter dated 27—5—53, to the Collector of Madras.

On behalf of the Madras State Cyclone Relief Committee, I am directed to acknowledge with thanks the receipt of 2,500 madies of grey handloom dhoties and 3,005 coloured handloom sarees valued at Rs. 23,156—1—6 and 21 bundles of old and used clothes offered by the Dravidian Progressive Federation for the relief of the cyclone affected People in the Tanjore and Tiruchirappalli

districts. The gift clothes have been sent to the Collectors of these districts in the proportion of 3:1 as desired by the Federation.

Yours faithfully,
(Sd.) L. S. RANGASAYEE,
For Deputy Secretary to Government.

— —

தமிழிலே தருகிறோம், அந்தக் கடிதத்தின் பொருளை, தமிழர்களாகிய நாம் தமிழ் மொழியில் பற்றுதல் கொண்டிருக்கும் காரணத்தால்!

சென்னை அரசாங்கத்தின் ரெவின்யூ இலாகாவிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகத் துணைச் செயலாளருக்கு வந்த கடிதத்தின் நகல்.

———

அய்யா,

27—5—53தேதி தாங்கள் சென்னை மாவட்டக் கலெக்டருக்குத் தீட்டிய கடிதம் பார்த்துக்கொண்டோம்.

தஞ்சை திருச்சி மாவட்டங்களில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக, தாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ரூபாய் 23,156—1—6 பெறுமானமுள்ள 2,500 மடிகள் கைத்தறி வேட்டிகளையும், 3,005 கலர் கைத்தறிப் புடவைகளையும் மற்றும் 21 மூட்டைகள் பழைய துணிமணிகளையும் அன்பளிப்பாக அளித்திருப்பதை நான் சென்னை அரசாங்கப் புயல் நிவாரணக் குழுவின் சார்பாக மிக்க நன்றியறிதலோடு பெற்றுக்கொள்கிறேன்.

இந்த அன்பளிப்பு ஆடைகள் தாங்கள் விரும்பியவாறே மூன்று பகுதி தஞ்சை மாவட்டத்துக்கும் ஒரு பகுதி திருச்சி மாவட்டத்துக்கும் பிரிக்கப்பட்டு அந்தந்த மாவட்டக் கலெக்டர்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

தங்கள் நன்றியுள்ள,
(ஒப்பம்) L. S. **ரெங்கசாமி,**
சென்னை அரசாங்க உதவிச் செயலாளருக்காக.

———

மலரவிருந்த திராவிடத்திலேயே திராவிட முன்னேற்றக் கழகம் அரசாங்கத்தின் நன்றியைப் பெற்றுக் கொள்ளும் அளவில் மட்டுமின்றி, புயலால் புண்ணுக்கப்பட்ட புத்துலகச் சிற்பிகளின்—கைத்தறி நெசவுத் தொழிலை ஏற்றுக் கொண்ட காரணத்துக்காகக் கண்ணீர் விட்டுக் கதறிக் கொண்டிருக்கும் கைத்தறித்துணி நெசவாளர்களின் கண்ணீரைத் துடைத்து நாட்டுக்குச் சேவையும் செய்திருக்கிறது என்பதை நாட்டு மக்கள் இப்போது நன்கு அறிந்திருப்பர்!

நிச்சயம், திராவிடம் மலரும் என்பதை—மலரும் திராவிடம் எவ்வாறு இயங்கும் என்பதை திராவிட முன்னேற்றக்கழகத்தின் கண்ணியம், கட்டுப்பாடு, பொறுப்புணர்ச்சி, தியாக உள்ளம் நடைமுறையிலேயே பதிலளித்து வந்திருக்கிறது.

இனி, இதனைக் கொண்டு சிந்தித்துக்கொள்ளுங்கள், எவ்வாறிருக்கும் **மலரும் திராவிடம்** என்பதை.